1361

அருட்பெருஞ்ஜோதி.

அருட்பிரகாசம்.

திங்கள் வெளியீடு.

எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

மலர் 1. | பிரபவ ஆண்டு ஆவணித்திங்கள். 11-ம் நாள். | இதழ் 4

தலையங்கம்.	...	...	96
ஷடாந்த சமரசம்.	....	...	98
சமரச சன்மார்க்கம்.	...	...	102
ஜீவகாருணிய ஒழுக்கம்.	...	....	104
அன்பு.	...	...	107
ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள்	...	....	110
தமிழர்.	....	....	111
மாணவர் பகுதி.	....	....	112
நூல்வெளியீடு.	....	...	113
சுப்பிரமணிய விளக்கம்.	....	....	114
கதம்பம்.	....	....	117

வடலூர், தி. கோ. வரதராஜர்
பத்திராதிபர்.

பிறையாறு.

இரத்தினவிலாச அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது-

வருடசந்தா ரூ 2.] 1927. [ஆயுட் சந்தா ரூ 25

அருட்பிரகாசத் தொண்டர்படை.

நம் தலைவராகிய ஸ்ரீமத், இராமலிங்கசுவாமிகள் பெயரால் ஒருதொண்டர்ப்படை ஏற்படுத்தி வடலூரில் வரும் ஜனங்களுக்கு விசேஷதினங்களிற் றொண்டுபுரிய ஏற்பாடுசெய்ய வேண்டும். இவ்விஷயத்தில் அனுபவம் முதிர்ந்த பெரியோர்கள் கருணை வள்ளலார் கொள்கையைத் தழுவி விதிகளை ஏற்படுத்தித் தொண்டர்களைச்சேர்த்து அடுத்த தைப்பூசத்தன்று முதல்முதல் ஆரம்பஞ் செய்ய மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் ஐந்துமாதத்திற்குமேலிருக்கிறதே என்று நினையாமல் இப்போதே இதைப் பற்றிய கவலை எடுத்து முயர்ச்சி செய்தால் இவைகளைச் சரிவர நடத்துவதில் குறுக்கிடும் இடைஞ்சல்களை நாம் முன்னதாகவே அனுபவத்திற்கண்டு அவைகளைத் திருத்தி ஒருவாறு அச்சமயம் பிழையின்றி நடத்தலாம். அன்பர்கள் ஒவ்வொருவரும் இதன் செய்வினையைப்பற்றி தமக்கு அனுபவமான சிற்சில வழிகளையாவது சொல்லக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதைக்குறித்து எழுதும் நண்பர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதக்கோருகிறேன்.

வே. வே. சேஷாசலம்.
64, வடக்குவீதி சிதம்பரம்.

குறிப்பு.

அன்பர் சேஷாசலமவர்கள் மேற்கூறிய யோசனைக்கு வடலூர் ஆலய உண்மையபிமானிகள் அனைவரும் ஒப்புக்கொள்ளவே செய்வார்களென்றும், இத்தொண்டர் படையானது தைப் பூசத்தில் ஜோதி தரிசனத் திருவிழாகாலத்தில் சுமார் மூன்று நாளைக்காவது அங்கிருந்து ஜனங்களையும், ஆலயத்தில் நிகழும் இடையூறுகளையும் கவனித்து ஒழுக்காகத் திருவிழாவைபவத்தை நடத்திவைக்கவேண்டியது அவசியமென்றும், ஆகவே இதற்காக வேண்டிய சகல முயற்சிக்கும் வடலூரை அடுத்துள்ள கூடலூர், சிதம்பரம் முதலிய பெரியடவுன்களிலிருந்தும் ஹைஸ்கூல் மாணவர்களில் "ஸ்கவுட்" (சாரணர்களாக) உள்ளத் திறமையும் ஊக்கமுமுள்ள பிள்ளைகளைப் பூசவிழாவுக்கு இரண்டுதினம் முன்னதாகவே அவ்வப்பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர்கள் அனுப்பி வைத்து உதவி புரியவேண்டிக் கேட்டுக்கொள்ளப்படவேண்டுமென்றும், இது மிகவும் அவசியமாக விரைவாகவே செய்யப் படவேண்டுமெனவும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறோம். திருவருள் முன்னிற்க வேண்டும். விவரங்கட்கு மேற்கண்ட விலாசத்திற்கு அன்பர்கள் எழுதுவார்களாக!

காவேரிப்பட்டணம்.
சுகவனம், சிவப்பிரகாசன்:

உள்ளுறை.

சமரச சுத்த சன்மார்க்க சத்திய விண்ணப்பம், ஸ்ரீமத் சுவாமிகள்.
தலையங்கம். பத்திராதிபர்.
ஷடாந்த சமரசம். சீகாழி ஸ்ரீமத், ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள்.
சமரச சன்மார்க்கம். சென்னை நவசக்தி ஆசிரியர், ஸ்ரீமத் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள்.
ஜீவகாருணிய ஒழுக்கம். ஸ்ரீமத், திருவ்ருட்பிரகாச வள்ளலார்.
அன்பு. பத்திராதிபர்.
ஸ்ரீமத், இராமலிங்க சுவாமிகள். தில்லையாளி, ஸ்ரீமான், த. வேதியப்பிள்ளை அவர்கள்.
தமிழர். தில்லையாளி ஸ்ரீமான், நா. தம்பியப்ப செட்டியார் அவர்கள்.
மாணவர் பகுதி. பிறையாறு தமிழுவாத்தியாயர், ஸ்ரீமான், ப. அ. கிருஷ்ணஸ்வாமிப் பிள்ளை அவர்கள்.
பொன்னுங் கண்ணிப் புதுமை. ஷை, ஷை.
நூல் வெளியீடு. பத்திராதிபர்.
சுப்பிரமணிய விளக்கம். ஸ்ரீமத் திருவருட் பிரகாச வள்ளலார் (சித்த்வளாகம் சக்கரவர்த்தி.)
கதம்பம், உத்தரஞான சித்திபுரத்து சிற்சபை அமைப்பு, சுவாமிகளின் அற்புதம், கிளைச்சங்கம் முதலியன.

சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்.

உத்தரஞான சித்திபுரமென்றும் உத்தரஞான சிதம்பரமென்றும், திருவருளா லாக்கப்பட்ட வாக்கச்சிறப்புப் பெயர்களும், பார்வதிபுரமென்றும் வடலூரென்றும் உலகியலாற் குறிக்கப்பட்ட குறிப்புப்பெயர்களும், பெற்றுவிளங்குகின்ற தெய்வப்பதியினிடத்தே இயற்கைவிளக்க நிறைவாகியுள்ள ஓர் சுத்த சிவானுபவஞான சபையில், எவ்வுயிரு மின்ப மடைதற் பொருட்டு இயற்கை யுண்மை நிறைவாகிய திருவுருவைத்தரித்து, இயற்கை யின்ப நிறைவாகிய சிவானந்த ஒருமைத்திருநடச்செய்கையை, எவ்வுயிருமின்பமடைதற் பொருட்டே செய்தருளுகின்ற எல்லாம்வல்ல தனித்தலைமைக் கடவுளாகிய அருட்பெருஞ்சோதி ஆண்டவரே! தேவரீரது திருவருட் சமுகத்தில் யான்செய்துகொள்ளுகின்ற சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்:—

இவ்வுலகினிடத்து ஆறறிவுள்ள உயர்வுடைத்தாகிய தேகத்தைப் பெற்றயான், இத்தேகத்துக்கு இடைக்கிடை நேருகின்ற மரணம், பிணி மூப்பு, பயம், துன்பமுதலிய அவத்தைக ளெல்லாவற்றையும் நிவர்த்தி செய்து இத்தேகத்தையே நித்தியதேகமாக்கிக் கொண்டு, எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எத்துணையும் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப்பெற்று வாழ்தல் வேண்டுமென்பதே எனது சத்தியமான அதிதீவிர விருப்பமுயற்சியாக விருக்கின்றது.

எனது விருப்பமுயற்சி இங்ஙனமாக, அவத்தைகளெல்லாவற்றையும் நீக்கி இத்தேகத்தை நித்தியதேகமாக்கி எக்காலத்துமழியாத பேரின்பசித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல் எதனாற் பெறுதல் கூடுமென்று அறியத்தொடங்கிய தருணத்து, வேறு எந்தவழியாலும் பெறுதல்கூடாது எல்லாமுடைய கடவுளது திருவருட் சுதந்தரமொன்றாலே பெறுதல் கூடுமென்று தேவரீர் திருவருளா லறிவிக்க உள்ளபடி யறிந்தேன். பின்னர்த் திருவருட் சுதந்தரம் நமக்கு எந்தவழியாற் கிடைக்குமென்று அறியத் தொடங்கிய தருணத்து எனது யானென்னும் தேகசுதந்தரம், போகசுதந்தரம், ஜீவசுதந்தரம், என்னுமூவகைச் சுதந்தரங்களும் நீங்கிய விடத்தே கிடைக்குமென்று தேவரீர் திருவருளாலறிவிக்க உள்ளபடி யறிந்தேன். ஆகலின் எனது சுதந்தரமாகக் கொண்டிருந்த தேகசுதந்தரத்தையும், போகசுதந்தரத்தையும், ஜீவசுதந்தரத்தையும், தேவரீர் திருவருட்கே சர்வ சுதந்தரமாகக் கொடுத்துவிட்டேன். கொடுத்த தருணத்தே இத்தேகமும், சீவனும், போகப்பொருள்களும், சர்வசுதந்தரராகிய கடவுள் பெருங்கருணையாற் கொடுக்கப்பெற்றனவன்றி, நமதுசுதந்தரத்தாற் பெற்றனவல்ல வென்னும் உண்மையை அருளா லறிவிக்கவும் அறிந்துகொண்டேன். இனி இத்தேகத்தினிடத்தும் சீவனிடத்தும் போகப்பொருள்களிடத்தும் தேவரீர் திருவருள் சாட்சியாக எனக்கு எவ்விதத்தும் யாதோர் சுதந்தரத் தோற்றமும் தோன்றமாட்டாது. தேவரீர் திருவருட் சுதந்தரத்தை என்னிடத்தே வைத்தருளி, மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பமுதலிய அவத்தைகளெல்லாவற்றையுந் தவிர்த்து இத்தேகத்தையே நித்தியதேகமாக்கி எக்காலத்து மழியாத பேரின்பசித்திப் பெருவாழ்வில் என்னை வாழ்வித்தல் வேண்டும். இத்தேகத்தைப்பெற்ற எல்லாச் சீவர்களுக்கும் எனக்கறிவித்த வண்ணமே அறிவித்து அவரவர்களையும் உரிமையுடையவர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும். தேவரீர் பெருங்கருணை யாடசித்து வந்தனம், வந்தனம்.

இங்ஙனம்,

சிதம்பரம், இராமலிங்கம்.

ஓம்.

திருச்சிற்றம்பலம்.

அருட்பெருஞ்சோதி.

அருட்பிரகாசம்.

ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சங்க
நிலயத்தினின்றும்
வெளிவருவது.

மலர் 1	சாலிவாகன சகாப்தம் 61 பிரபவ ஆண்டு ஆவணித்திங்கள் 11-ஆம் நாள். 1927-ஆம் வருடம் ஆகஸ்டு-மாதம் 26-ஆம் தேதி	இதழ் 4

உத்தரஞான சிதம்பர மான்மியம்.

இணையென் றுதான்றனக் கேற்றது போற்று மெனக்குநல்ல
துணையென் றுவந்தது சுத்தசன் மார்க்கத்திற் றோய்ந்ததென்னை
யணையென் றணைத்துக்கோண் டைந்தொழி லீந்த தருளுலகிற்
றிணையைந் துமாகிய துந்தா ஞான சிதம்பரமே.

அருட் பெருஞ் சோதி மான்மியம்.

ஆர்கின்ற தெள்ளமு தின்சுவை யென்னெனென் றறைவனந்தோ
சார்கின்ற சிற்றம் பலப்பெருஞ் சீரினைச் சாற்றுதோறும்
சேர்கின்ற நாவுட னுள்ளமு மாவியுந் தித்தித்ததலே
நேர்கின்ற தாலென் னருடபெருஞ் சோதி நிறைந்துளத்தே.

சிற்சத்தி மான்மியம்.

சோதிக் கொடியே யானந்தச் சொருபக் கொடியே சோதியுருப்
பாதிக் கொடியே சோதியிடப் பாகக் கொடியே யெனையீன்ற
ஆதிக் கொடியே யுலகுகட்டி யாளுங் கொடியே சன்மார்க்க
நீதிக் கொடியே சிவகாம நிமலக் கொடியே யருளுகவே.

உலகப்பேறு.

பாம்பெலா மோடின பறவையுட் சார்ந்தன
தீம்பலா வாழைமாத் தென்னைச் சிறந்தன
ஆம்பலன் மென்மேலு மாயின வென்னுளத்
தோம்பலென் னருட்பெருஞ் சோதியா ரோங்கவே.

உண்மை மனிதர்.

"எல்லாரு மானிடர் தாமோ, கல்லெல்லா மாணிக்கக் கல்லோ" எனப் பெரியார் கூறி யிருக்கின்றனர். இவற்றால் பெறுதற் கரிய மக்கள் யாக்கையைப் பெற்றபோதிலும் உண்மை மனிதனுக வேண்டுமென்பது பெரியார்களின் துணிபு. அதனால், மக்கள் யாக்கைக்குரிய உத்தம தத்துவங்கள் முதிர்ச்சி பெற்றாலொழிய உண்மை மனிதனுக இயலாதென விளங்குகின்றது. மனிதர் முக்கியமாக தேகம்,மனம்,புத்தி,ஆத்மாஎனநான்கு தத்துவங்களையுடையவர். சிலர் தேகதத்துவத்தில் பெருத்து, மற்றைய மூன்று தத்துவங்களில் குறைவுற்றுக் காணப்படினும், தேகத்திலும் மனதத்துவத்திலும் மிகுத்து மற்றைய ஆத்மதத்துவத்தில் குறைவாகக் காணப்படினும் இவர்கள் முறையே கல் மிருகம் சுயநலங் கருதும் காக்கை நரிக்கு வொப்பானவர்க ளென்று பெரியோர்களின் வாக்கியமாயிருத்தலை நாம் உணர்கின்றோம். முற்கூறிய மூன்று தத்துவங்களோடு ஆத்தும தத்துவத்திற்குரிய ஜீவகாருணிய முதிர்ச்சி யடையவேண்டுமென்பதே மேற்கண்ட பழமொழிகளின் கருத்தாகக்கொள்ளலாம். தேகஉழைப்பும் மனதினமைதியும் அறிவின் ஆராய்ச்சியும் சீவகாருணியமும் பொருந்திய தன்மையினாலேயே மக்கள்யாக்கைக்குரிய உத்தமத் தன்மையை வகித்த உண்மை மனிதனுக எவரும் பெரியோர்கள் முன்னிலையில் காணப்படுகிறார். ஆதலால், மேற்கண்ட நான்குதத்துவங்களையும் ஒருங்கே வளரச்செய்விக்கவேண்டிய கடமைகளில் உண்மை விரும்புவோர் எவரும் பின்னடையலாகாது, கல்வியுஞ் சன்மார்க்கப் பயிற்சியுமே சாதனங்களாக எடுத்துக்காட்டிய தத்துவங்களின் வளர்ச்சிக்குக் காணப்படுகின்றன. பூர்வசரித்திரங்களாகிய இராமாயணம், பாரதம், முதலியநூல்களை ஆராயுமிடத்து அந்தணராயினும், அரசராயினும், வணிகராயினும், வேளாளராயினும், சுவாசப்பயிற்சியினாலும், தேக உழைப்பினாலும் வல்லுடம்பையும், நோயின்மையும், ஆரோக்கியத்தையும் பெற்றிருந்தார்களென்பது தெற்றென விளங்குகின்றது. எவ்வித கஷ்டநஷ்டங்கள் வந்தபோதிலும் அவற்றோடு எதிர்த்துப்போராடி

உண்மை மனிதர்.

செயித்தற்குரிய மனோவலிமையும் அஞ்சாமையும் வீரத்துவத்தையுங் கொண்டிருந்தார்களென்பதை யாவரும் நன்கறிதற்கூடும். அறிவினுடைய விசேஷத்திலோ, அறிவினுடைய முதிர்ச்சியிலோ முக்காலங்களையும் உணரவல்ல முனிவர்களாகவும் விளங்கினார்கள். சீவகாருணியத்திலே ஒப்புயர்வற்ற செய்கைகளை அரியனவாகவும் பெரியனவாகவுஞ் செய்துகாட்டியுள்ளார்கள். எத்தனையோ யுகங்களும் ஆண்டுகளும் கடந்தும் அன்னார்களுடைய பெயர் உலகசரித்திரத்தில் ஒளியாமல் மிளிருகின்றன. "பாடையேறினும் யேடுகைவிடேலென்ற பழமொழிக் கொப்ப நூலாராய்ச்சியையும் உசுவாச நிசுவாச பழக்கத்தையும் தேகப்பயிற்சியையும் சீவகாருணிய ஒழுக்கத்தையுஞ் சன்மார்க்கத்திற்குரிய சாதனங்களாகக்கொண்டு பொழுது விடிந்ததுமுதல் அந்திபடும் வரையில் செய்யவேண்டிய நித்திய நைமித்திய அநுஷ்டானங்களை நாடோறும் தவறாமல் செய்து வந்தனர்களென்பதைச் சரித்திரங்களே சான்றுகூறும். தேகத்தையும் மனதையும் வாட்டி வலியிழக்கச்செய்தும், அறிவைமயக்கியும் ஆத்மதத்துவத்தைக் குறைத்தும் மறைத்தும் வரும் நவீன நாகரிகம்மேலிட்ட இக்காலத்தில், கல்வியும் நல்லொழுக்கமுஞ் சன்மார்க்கப் பயிற்சியும் நல்லவர்களுடைய சாவகாசமும் நாடோறும் அநுசந்தானஞ் செய்யாதவரையில் மக்கள் உடம்பைப் பெற்றவர்யாவரும் உண்மை மனிதராகப் பெரியோர்கள் முன்னிலையில் காணப்படார் என்பது கண்கூடாக விளங்குகின்றது.

இதுபற்றியே ஸ்ரீமத் வள்ளலார்,

சற்சபைக் குரியார் தம்மொடுங்கூடித் தனித்தபே ரன்பும் மெய்யறிவு
நற்சபைக்குரிய வொழுக்கமு மழியா ஞான மெய்வாழ்க் கையும்பெற்றே
சிற்சபை நடமும் பொற்சபை நடமுந் தினந்தோறும் பாடிநின்றாடி
தெற்சபை யுலகத் துயிர்க்கெலா மின்பஞ் செய்யவு மிச்சையாமெந்தாய்
தங்கமே யனையார் கூடியஞான சமரச சுத்த சன்மார்க்க
சங்கமே கூடிக் களிக்கவுஞ் சங்கஞ் சார்திருக் கோயில்கண்டிடவுந்
துங்கமே பெருஞ் சற்சங்க நீடூழி துலங்கவுஞ் சங்கத்திலடியே
னங்கமே குளிர நின்றனைப் பாடி யாடவு மிச்சையாமெந்தாய்.

எனவுங் கூறியிருக்கின்றார். சுபம். சுபம்.

அருட்பிரகாசம்.

அருட்பிரகாசம் அவாவும் அன்பர்காள்!

"எல்லாஞ் செயற்கூடும்" எனவுரைத்த வள்ளற் பெருந்தகையார் வாய் மொழிப்படி இனிநம், "அருட்பிரகாசம்" வியாசப்பெருக்கானும், வடிவழகானும், மற்றும்பல்வகைச்சிறப்பானும் சுக்கில பக்கச் சந்திரனையொத்துப் பிரகாசிக்குங் காலஞ் சமீபித்திருத்தலின், இதனைக்கண்ணுறும் மெய்யன்பர்கள் பலரும் பொதுத்துறையி னுழைக்க முன்வந்து பல்லிடங்களினுஞ் சந்தாதாரர்களை யேற்படுத்தி இவ்வருட்பிரகாசத்தை எங்கும் பிரகாசிப்பிக்கச்செய்யவேண்டுகின்றனன். ப—ர்

ஷடாந்த சமரசம்.

சீகாழி ஸ்ரீமத்,

(ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள்.)

(மலர் 1. இதழ் 4. பக்கம் 74-ன் தொடர்ச்சி.)

இதுபிரஹதாரண உபநிஷத்தில் கூறுவதால் சீவசிருட்டியும் மாயையும் அனுதிசித்தம். இந்தச்சீவனுக்குப் பிரகிருதியாகிய அவித்தையேகாரணதேகம். இதிலேயுண்டான தத்துவங்கள் கூடி அன்னிதாஞானமாய் இலிங்கதேகமாகிற சூட்சுமதேகத்தில் தர்ப்பணபிரதி விம்பம்போலச் சிவன் காண தேகத்தினின்று லிங்கதேகத்தில் பிரதி பலித்தவுடன் அனந்தகோடி ரூபமானன். செனனமரண துக்கமுதலானது வர்த்தித்ததென்றறிக. இந்த லிங்கதேகம் இரணிய கெற்பன். இதேலிங்கதேகம். இந்த லிங்கதேகமே நெளிவு ஊர்வனமுதல் அமிசாது சீவபேதமும் இதுவும்அல்லாமல் தூலதேசம் வரும்படி யிந்தஇலிங்கதேகம் செய்த புண்ணிய பாவவிதத்தினாலே நர யோனியாம். இந்தலிங்கதேகத்துடன் கூடின சீவன் உசுவாச நிசுவாசத்தாகிலும் அன்னபானதியிலாகிலும கர்மாதீனத்தானே சீவன் அணுரூபமாய் பதினெட்டுதானியத்தில் ஒருவிதத்தில் ஈனமாய் அன்னமயகூடுதானது காரணமாம். அதெப்படியெனில், புசிப்புகளிலேஅன்னரசமுதலானவையுடன் கூடி தகப்பன் தேகத்திலே யிரசமாய் இதுஜடாரக்கினி சம்பந்தத்தாலே ஆறுதாதுவாகி மீண்டு பதினாலுநாளில் சுக்கிலமாய் ருதுகாலத்தில் மாதாவின் சுரோணிதத்திலே கூடிப்பரிணமித்து தூலதேகமாம் என்றறிக. இப்படி காரணசூட்சுமஸ்தூலமாகிய மூன்று தேகத்திற்கும் விராட்டு இரணிய கெற்ப அவ்வியாகிருதனென பரமாத்மாவின் மூன்றுதேகமேயுட்கருவியாய்ப்

பிரேரிக்கும் என்றறிக. சீவனுக்கு அஞ்ஞானத்திலே பிறப்புவந்தது என்று அறிக. இனி (முத்திநிலையாவது) முன்சொன்ன சீவனுக்குப் பாசபந்தமான பிரகிருதி லிங்கதேகம் ஸ்தூலதேகம் முதலிய தத்துவங்களை யெல்லாம் நீயல்லவென்று நேதிபண்ணித்தனுகரண புவனபோகமெல்லாம் இரச்சுசற்ப பிராந்தியானது போலாயிற்றென்று அனுபவபூமிநாலில் முதற்பூமி(விக்ஷிப்த ஆவது) பிரமப்பியாசஞ் சந்தேகமாய் சொருபத்தில் சித்த சமரசமானது அதைவிட்டுச் சம்சார விவகாரத்திலே லயமாய் விவகாரத்தில் எட்டிப் பார்த்துத் திரும்பச்சமாதியாவது இனிமூன்றாம்பூமி (ஸுலூஷ்டநமாவது) மனது பி மத்தில் கலந்து ததாகாரமாயானந்தம் பொங்கும். இனி நான் காம்பூமி (ஸுலீநதமாவது) பிரமத்திலே சித்தம் சேடம் இல்லாமல் லயமாய் ஞெப்தி மாத்திரமாவது இதனல் பிரமாப்பியாசமாகிற பரிபூரணம் பிறக்கும். இந்திரியம் பற்றுமிடமெல்லாம் சுலீனதநிஷ்டையில் நிற்பதென்றறிக. இனிஇப்படிக் குருவாலே சாம்பவி கேசரிஞான மவுனமுத்திரைகளைப்பெற்று ஜெகசீவபரமெல்லாம் பிரமத்தைவிட வேறில்லையென்று தெளிவதே மோட்ச மென்றறிக. இந்தமாயாவேத வைதீக வேதாந்தம் வியாசகற்பிதம் என்றறிக. இனிச் சச்சிதானந்தத்திற்கு அர்த்தம் சத்தேபரப்பிரமம். சித்தேபிரமத்தின் சிற்கிரண பிரபாவமான சித்பிம்பம். ஆனந்தமே இந்தஇரண்டின் மத்தியமான விலாசம். இம்மூன்றும் ஒருமித்தலே யீஸ்வரன். பிரமமே சுத்ததனு. சித்து சிற்கிரணதனு. ஆனந்தமே யீஸ்வர தனு தற்பத நிற்குணம் சிற்பதம் சகுணம் ஆனந்தமே சகுணநிற்குணம். சற்பதம் பிரவர்த்தி நிவர்த்தி யில்லாதது, சிற்பதம் மாயையும் மாயா பிரவர்த்தியும் நிவர்த்தியும் உள்ளது. இதுசத்துமல்ல. அசத்துமல்ல. சத்து அகர்த்தா சித்துகர்த்தா. கிரியாரூபம் ஆனந்தம் சகலகர்த்தவ்வியத்துக்குங் காரணம் இதுஉத்தரமீ மாங்கிசை யென்று பேராய் உபநிஷத்தார்த்தப் பிரதிபாதிகமாய் பிரபஞ்சத்துக்கு மிதியா தத்துவம் சாதிக்கையாலே பிரமாத்ம அயிக்கியத்துவம் சொல்லும் என்றறிக. ஞெப்திமாத்திரமாகிய ஆத்மா பிரமாயிக்க ஞானத்தாலே விவகாரபந்த நிவர்த்தியாவதேமோட்சமென்றறிக.

சுத்தவேதாந்தம்.

சத்தியமாக சகசீவபரத்தைச்

சுத்தமதாய்ச் சொலல் சுத்தவேதாந்தம்.

சொரூபலக்ஷணம் விவேகசிந்தாமணியில் சொல்வது:— திருக்கு, திரிசியம் என்றிரண்டாம். இதில் திருக்கு விவேகமாவது அதிசூக்குமவானந்தம் பரிபூரணஞானஞ்ஞானவிருத்தி ஞாதுரு ஞானஞேயம் சத்துசித்து ஆநந்தஞ் ஜெகசீவபரம் இவைகளொன்று மில்லாத விடத்தில் எதிர்த்த பொருளாய்ச் சுத்தசூனியமாய்ச்

அருட்பிரகாசம்.

சுத்தஞெப்தி மாத்திரமாயிருக்கிற பொருளொன்றுண்டென்பது. இனித் (தடத்தலக்ஷணமாவது) முன்சொன்ன திருக்குவினிடத்தில் சுகதபேதம், சுஜாதிபேதம், விஜாதிபேதமென நிராகரிக்கத்தக்க வேதத்திரியமுண்டு. அவைகட்குத் திருஷ்டாந்தம் ஒருவிருக்ஷத்திற்குப் பத்திரபுஷ்பபலாதிகளே சுகதபேதம். விருக்ஷாந்தரமே சுஜாதிபேதம், பாஷாணாதியே சுஜாதிபேதம். திருக்கான சத்துரூபபிரமம் ககநம்போல நிரவயவ மாகையாலும், சத்துக்கு வேறொரு சத்தில்லாமையாலும் சுகதபேதம். சுஜாதிபேதமில்லாதிருந்தாலும் ஜகத்காரண மாயையுண்டாகையால் சுஜாதிபேதமுண்டென்னின், சித்திரிகனைவிட்டுச் சித்திரசத்திவேறு தோன்றுவதில்லாததெப்படியோ அப்படிச் சின்மாத்திரபிரமத்தைவிட்டு மாயைக்கு விலக்ஷணத்துவமில்லையாகையால் விஜாதிபேதமில்லை என்பதே நிச்சயம்; இந்தஅர்த்தத்தில், ஏகமேவத்துதியம்என்னும், பதத்திரயத்திற்கு ஐக்கிய, அவதாரணை, துவைத நிஷேதமென அர்த்தத்திரய மாகையால் அந்தக்கிரமத்தில் சுகதசுஜாதி, விஜாதிபேதத்திரையமில்லை யென்பதுபிரமாண மென்றறிக. இனிக் (கற்பிதத்துவயம்) அத்தியாரோபம் அபவாதமெனக் கற்பித்தது வையமுண்டு. அவற்றுள், உண்டான ரச்சு, சுத்தி, ஸ்தாணுவாதியில், கிரமத்திலில்லாதசர்ப்ப, ரசித, சோராதிகற்பிதம்போலச் சத்ரூபபிரமத்தில் இல்லாத மாயப்பிரபஞ்ச கற்பனையே, அத்தியாரோபமாம். இதுஸர்ப்பமல்ல ரச்சுவே. இதுரசிதமல்ல சுத்தியே இதுசோரனல்ல தாணுவே என்பதுபோல விசாரமுகத்தால் இதுபிரபஞ்சமல்ல பிரமமென்பதே யபவாத மென்றறிக. இனி (உபாயத்திரயம்) அதத்துவியாவிருத்தி லக்ஷணை தடத்தலக்ஷணை சொரூபலக்ஷணை எனத் திருக்குரூபவஸ்து சாட்சாத்காரத்துக்கு உபாயத்திரயமுண்டு. அவற்றுள், தேகாதி அநாத்மவர்க்கங்களை யுத்தியால்நேதித்து, நின்றஆத்மனை அறிவிப்பதே அதத்துவியா விருத்திலக்ஷணையாம். விருக்ஷத்தின்மேலே சந்திரனிருப்பானென்பது போலப் பூதாதிஜகத்காரணத்திருந்த ஆத்மனையறிவிப்பது தடத்தலக்ஷணையாம். பிரகிருஷ்டோஷ்ணப் பிரகாசரூபமே சூரியனென்பதுபோல, ஆத்மன்னி ரூபமறிவிப்பதே சுரூபலெக்ஷணையாமென்றறிக.

ஆத்மசொரூப லக்ஷணபஞ்சகம் சத்து சித்து ஆனந்தம் நித்

தியம் பூரணம் எனஆத்மாவின் சொரூப லக்ஷபஞ்சகம் உண்டு. அவற்றுள், அறிவேன் அறியேன் என்னும் இடத்திலும் காமாதி விருத்தி தோன்றுமிடத்திலும் தோன்றாவிடத்திலும் சாக்கிராதி அவத்தையிலும் தனக்கொருவாதை இல்லாமல்உண்டு என்பதே சத்ரூபமாம். சர்வாவஸ்தையிலும் விஷயங்களை இடைவிடாது அறிகின்றதே சித்ரூபமாம். பரமப்பிரீதியில் விஷயமானதே ஆனந்தரூபமாம். சநோதிமாவதே நித்தியரூபமாம். சர்வார்த்த சாதகமாகையால் சர்வசம்பந்தத்துவமே பூரணரூபமாம். சச்சிதானந்தமே ஆத்மசொரூபமானால் சத்துஞ்சித்தும்போலச் சர்வ புத்திவிருத்தியிலும் ஆனந்தரூபத்திற்கு அபிவியக்தி உண்டாக வேண்டும், அஃது இல்லாமையால் ஆனந்தம் ஆத்மசொரூபம் அல்லஎன்றால், உஷ்ணப் பிரகாசமான தீபப்பிரகாசமே கிருகத்தில் வியாபித்திருக்கும் உஷ்ணம் வியாப்தமாகாது, ஜகத்தில் உஷ்ணமே பிரகாசித்திருக்கும். பிரகாசம் பிரகடிதமாகாது. காஷ்டத்தில் உஷ்ணமும் பிரகாசமும் இரண்டும் பிரகடமாயிருக்கும். அப்படியே பிரமத்தின் சத்து பாஷாணாதிகளில் அபிவியக்தியாகிறதல்லாமல் சிதானந்தங்கள் பிரகாசியாது புத்தியின் தமோகுணத்தால் அஞ்ஞானமயமான மூடவிருத்தியிலும், ரஜோகுணத்தால் ராகமயமான குரோதவிருத்தியிலும், சத்துச்சித்து இரண்டும் பிரகாசிக்கிற தல்லாமல் ஆனந்தம் பிரகாசியாது. சத்துவகுணத்தால் வைராக்கியமயமான சாந்தவிருத்தியில் சச்சிதானந்தமென்றும் திரிரூபத்திற்கும் ஸ்புரணை காண்பிக்கும். ஆகையால் ஆனந்தம் ஆத்மசொரூபமாம். இந்தப் பஞ்சரூபத்திற்கும் உபாதி பேதமாவது:- சத்துத்திரயம். அவை வியாவகாரிகசத்து, பிரதிபாஸிகசத்து, பாரமார்த்திகசத்து எனமூன்றாகும். அவற்றுள், சாக்கிரத்தில் கடாதிசத்தே விதேககைவல்லிய பரியந்தம் அழுத்தி மூர்ச்சை முதலிய அவஸ்தையிற் றோன்றாமல், எழுந்தபொழுது முன்போலத் தோன்றுகையால் வியாவகாரிகசத்து. சுத்திகா ரசிதசொப்பன விஷயாதி சத்துத்தோன்றுகிற காலத்தில் அல்லாமல், விழித்தகாலத்தில் இல்லாமையால், பிராதிபாஸிக சத்து. சமஸ்தகற்பனைக்கும் தோன்றாது அடங்காது இருக்கிற பிரமசத்தே பாரமார்த்திகசத்து என்றறிக. இனிச்சித்துச் சதுஷ்டயம்:- ஜீவாசுவர கூடஸ்தபிரமம் என்னும் நான்கும் சித்துச் சதுஷ்டயமாகும்.

(தொடரும்.)

அருட்பிரகாசம்.

சமரச சன்மார்க்கம்.

(ஸ்ரீமான், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள்,) நவசக்தி ஆசிரியர்.

(மலர் 1. இதழ் 3. பக்கம் 78-ன் தொடர்ச்சி.)

நான்குவித தொழில்கட்கும் நான்குவித சாதி யிருத்தல் வேண்டுமென்றும், இல்லையேல் உலகம் நடைபெருதென்றும், சிலர் வாதமிடுகிருர். மக்கள் பிரிந்து நான்குவித தொழிலையும் நிகழ்த்த வேண்டு மென்பதை யான் மறுக்கின்றேனில்லை. அப்பிரிவு பிறப்புவழியில் இருத்தல் இயற்கைக்கு மாறுபாடுஎன்பது எனது உள்ளக்கிடக்கை. உலகில் எங்கணும் நான்குவித முறைகளிருக்கின்றன. யாண்டாதல் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதப்படுவதுண்டோ? சிறப்பில் உயர்வு தாழ்வு உறல் இயல்பு. இவ்விந்திய நாட்டில் ஹிந்துக்களிடை மட்டும் பிறப்பில் சாதிகொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு கொள்ளாத நாடுகள் அழிந்துபட்டனவோ? படுகின்றனவோ அவைகள் யாவும் உரிமையின்பத்தைச் செவ்வனே நுகர்ந்து வருகின்றன. பிறப்பால் சாதிகொண்டு உயர்வு தாழ்வு கணிக்கும் இந்தியாவோ தவிக்கிறது.

நாளடைவில் நால்வகைச்சாதி நாலுலட்சம் சாதிகளாய் விட்டன. சாதிக்குள் சாதியாகவும, கிளைக்குள் கிளையாகவும், சாதிக்குப்பைகள் பெருகி விட்டன. திண்ணைக்கொருசாதி, நடைக்கொருசாதி, கூடத்துக்கொரு சாதி, மாடத்துக்கொருசாதி, அறைக்கொருசாதி, அடுப்புக்கொருசாதி. கொல்லைக்கொருசாதி, வீட்டுக்கொருசாதி, தெருக்கொருசாதி, கோயிலுக்கொருசாதி, கடவுளுக்கொருசாதி, எத்துணை எத்துணை எத்துணை எத்துணைச் சாதிகள் நாடெங்கும் சாதிநாற்றமே வீசுகிறது.

நமதுநாட்டார் பெண்ணுரிமை கடிந்த தீவினையும், பிறப்பால், சாதி வகுத்த தீவினையும், மக்களுள் தீண்டாமைகொண்ட தீவினையும், இப்பொழுது மூண்டெழுந்து நாட்டை அரிக்கின்றன. எரிக்கின்றன. இயற்கைக்கு மாறுபட்டு நின்றதன்பயனை இப்பொழுது நாடுஅனுபவித்து வருகிறது. கொடுமைகளைக்கண்டு இயற்கை யன்னைவாளா கிடப்பளோ! அவள் இப்பொழுது நாட்டை ஒறுத்துவருகிருள்.

அன்பர்களே! நமது நாட்டுக்குள்ள சிறுமையைப்போல வேறு எந்நாட்டுக் கேனுமுண்டோ? நமதுநாட்டுமக்கள் வயிருர சோறுண்கிருர்களா? அவர்கட்கு நல்லுடையுண்டா? நல்லுறக்கமுண்டா? நமதுநாட்டுக் கலைகளெங்கே? தொழில்களெங்கே? எலலாம்போயின. ஒருசாண்வயிற்றிற்கு நம்மவர்கள் கடல்கடந்தோடி மானமிழக்கிருர்கள். இவ்வளவிற்குங் காரணமாயுள்ள தீவினைகளுக்குக் கழுவாய்தேடிக் குறைபாடுகளைக் களைய வேண்டுவது நமது கடமை யன்றே?

சமரசசன்மார்க்கம்.

முதலாவது நம்முன்னோர்கள் செய்த தவறுதலுக்கு நாம் கழுவாய் தேடவேண்டும். இந்துக்களென்று இந்நாளில் கருதிக்கொள்வோர் அனைவரும் நாடோறும் காலை மாலை இரண்டுவேளைகளிலும் ஆண்டவனை நோக்கி வழிவழி நிகழ்ந்து வரூஉம்குற்றங்களை மன்னிக்குமாறு கேட்பாராக; கேட்குமளவோடு நில்லாது திங்கட்கொருமுறை நோன்பு மிருப்பாராக. இவ்வாறு உளத்தைத் தூய்மைப்படுத்திப் படிப்படியாகச் சிலதிட்டங்கள்கோலி அவைகளைச் செயலில் நிகழ்த்த முயல்வாராக. திட்டங்களை முறைமுறையாக ஈண்டுத்தொகுத்துக் கூறவேண்டுவதில்லை. சிலகுறிப்புக்களை மட்டும் நினைவூட்டுகிறேன்.

பெண்ணுலகு:- பெண்ஒருபாதி; ஆண்மற்றொருபாதி. இரண்டுஞ்சேர்ந்த ஒன்றே முழுமனிதத்தன்மை. அங்ஙனமாக வாழ்வின்ஒருபாதி உரிமை கடிவது எத்தகை அறியாமை? உடலில் ஒருபாதிகுருதி யோட்டங் குன்றினால் உடல்நிலையென்னும்? பாரதமாதாவின் ஒருபாதியாய பெண்ணுலகின் உரிமை கொடுத்தமையால், அவள் வறுமையால் பீடிக்கப்பட்டுக் கிடக்கின்றாள். அவ்வறுமை நீங்கினாலன்றி அவளுக்கு உய்வில்லை.

"ஒத்தபண்பும் ஒத்தநலமும் ஒத்தஅன்பும் ஒத்தசெல்வமும் ஒத்தகல்வியுமுடைய ஒருவனும் ஒருத்தியும்" என்றார் நர்க்கீரனார் பெண்மக்கள் பண்டைநாளில் எல்லாவழியிலும் ஒத்துவாழும் உரிமை பெற்றிருந்தார்கள். அவ்வுரிமையின்பத்தை மீட்டும், அவர் நுகருமாறு ஆண்மக்கள் நடந்துகொள்ளல்வேண்டும். பெண்ணுலகக் கேட்டால் ஆணுலகுக்கும், பின்னை நாட்டுக்குமே ஊறுவிளைந்துள்ளதை அன்பர்கள் கவனிப்பார்களாக. தாய்மைக்குரிய பெண்ணின் சிறுமை நாட்டின் சிறுமை ஆதல் இயல்பு. ஆதலால் பெண்ணலன் நாடவேண்டுவது நம்பெருங்கடமை.

பண்டைநாளில் ஆண்மகனோடு ஒத்தகல்விபெற்றிருந்த பெண் இந்நாளில் அக்கல்வி ஏன்பெறுதல் கூடாது, நீண்டநாளாக நாட்டின் தாயாகிய பெண் கல்வியிழந்தமையால் விளைந்தகேடுகள் எண்ணில; எண்ணில.

ஆண்மகன் இரண்டுமூன்றுபெண்களை மணஞ்செய்து கொள்வதும், பெண்மக்கள் உற்றவயதடையாமுன்னர் அவளைத்திருமணஞ்செய்துகொடுப்பதும், பெண்மகள் இளமையில் கைம்மை எய்தினால் வேறுகளைகளின்றி, நரகிடைவீழ்ந்து வருந்துவதும் இன்னோரன்ன பிறநிகழ்ச்சிகளும் எத்தகைக் கொடுமைகள்! அன்பர்களே உன்னுங்கள்; வழுக்கிவீழ்ந்த சகோதரிகள் நிலையை நினைக்கும்போது கண்ணீர் பெருகுகிறது.

பிறப்பால்சாதி:— பிறப்பால் உயர்வு தாழ்வு பாராட்டல் தொலைதல் வேண்டும். சிறப்பால் உயர்வு தாழ்வு தோன்றல் இயல்பு. உயர்குலத்தில் பிறந்தவன் எத்தகைக் கயமைத்துறையில் இழிந்து விளையாடினும் அவனை

உயர்ந்தவனாகக் கருதவேண்டுமென்று நியதி இயற்கைக்கு அரண்செய்வ தன்று. ஒருவனுக்கு உயர்வளிப்பது ஒழுக்கமன்றிப் பிறப்பன்று. தொழின் முறைபற்றி எழுந்தபிரிவு பிறப்பைப்பற்றி எழலாயிற்று. அதைக்குலைத்தல் வேண்டும். இப்பொழுது அஃது இயல்பில் குறைந்தேவருகிறது. இன்னும் விரைந்து அதைக்குறைக்க முயலல்வேண்டும். இதற்கென சிலமுறைகளைக் கடைப்பிடித்தல் நலம்.

சீவகாருணிய ஒழுக்கம்,

ஸ்ரீமத் திருவருட்பிரகாச வள்ளலார்,

(மலர் 1. இதழ் 3. பக்கம் 82-ன் தொடர்ச்சி.)

ஜீவகாருணியம் ஆன்மாக்களின் இயற்கை விளக்க மாகலால் அந்தவியற்கை விளக்க மில்லாத சீவர்களுக்குக் கடவுள் விளக்கம் அகத்திலும், புறத்திலும் வெளிப்படவேமாட்டாது. சீவகாருணியத்துக்கு முக்கியமான லட்சியம் எதுவென்னில்:- ஆன்மாக்களெல்லாம் இயற்கையுண்மை ஏகதேசங்களாயும், இயற்கை விளக்கமாகிய அருள், அறிவுக்கறிவாய் விளங்குவதற்கு ஒற்றுமையுரிமை இடங்களாயுமிருக்கின்றன வென்றும், அந்தவான்மாக்கள் சீவர்களாகி அதிகரிப்பதற்குப் பூதகாரியதேகங்களே உரிமையாக விருக்கின்றன வென்றும், அந்ததேகங்களி லான்மாக்கள் சீவர்களாகி அதிகரியாவிடில் ஆன்மவிளக்க மறைபடுமென்றும், அதனால் அருள்விளக்கம் வெளிப்படாதென்றும், அப்போது மூடமுண்டாகுமென்றும், அதுவே யான்மாக்களுக்கு பந்தமாகுமென்றும், அதுபற்றி அவசியம் பூதகாரியதேகம் வேண்டுமென்றும், பூதகாரியதேகங்களுக்கு மாயைமுதற்காரணமாதலா லந்தமாயையின் விகற்பசாலங்களாகிய பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை என்பவைகளால் அந்தத்தேகங்களுக்கு அடிக்கடி அபாயங்கள் நேரிடுமென்றும், அப்படி அபாயங்கள் நேரிடாமல், கரணேந்திரிய சகாயங்களைப்பெற்ற தம்மறிவைக்கொண்டு சர்வசாக்கிரதையோடு முயற்சிசெய்து தடுத்துக்கொள்வதற்குத் தக்கவல்லபசுதந்தரம் சீவர்களுக்கு அருளாற் கொடுக்கப்பட்டதென்றும், அந்தச் சுதந்தரத்தைக்கொண்டு சீவர்களெல்லாந் தேகங்களிலிருந்து அபாயங்களைநீக்கி ஆத்மலாபத்தைப் பெறுதற்கு முயற்சிசெய்யக்

கடவரென்றும், ஊழ்வகையாலும் அஜாக்கிரதையாலும் பசி தாகம் பிணி இச்சை எளிமை பயம் கொலை என்பவைகளால் வரும்அபாயங்களை நிவர்த்திசெய்து கொள்ளமாட்டாமல் வருந்துகின்ற சீவர்கள் விஷயத்தில் அவைநிவர்த்தி செய்விக்கத்தக்க சுதந்தரமுள்ளசீவர்கள் காருணியத்தால் நிவர்த்தி செய்விக்க வேண்டுமென்றும், அப்படி நிவர்த்தி செய்விப்பதில் பசியினால் வருந்துன்பமும் கொலையினால் வருந்துன்பமும் தவிர மற்றவைகளால் வருந்துக்கங்களை மாற்றுவது அபரசீவகாருணிய மாதலால் இவ்வுலக வின்பத்தை மாத்திரஞ் சிறிது உண்டுபண்ணுமென்றும் பசியினால் வருந்துன்பத்தையும், கொலையினால்வருந்துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பது பரசீவகாருணியமாதலால் இவ்வுலக வின்பங்களையும் அளவிறந்த சித்தியின்பங்களையும் எக்காலத்துமழியாத முத்தியின்பத்தையு ;மருளாலடையப் படுமென்றும், ஊழ்வகையாலும் அஜாக்கிரதையாலும் அன்னிய சீவர்களுக்கு நேரிடுகிற அபாயங்களை நிவர்த்திசெய்விப்பதற்குத்தக்க சுதந்தரமு மறிவுமிருந்தும் அவ்வாறுசெய்யாமல் வஞ்சித்தவர்களுக்கு இவ்வுலகவின்பத்தோடு மோட்சவின்பத்தை யனுபவிக்கின்ற சுதந்தரம் அருளாலடையப்படுவதில்லையென்றும், தற்காலத்தில் அனுபவிக்கின்ற புவனபோக சுதந்தரங்களையு மிழந்து விடுவரென்றும் கடவுள் வேதத்தில் விதித்திருக்கிறபடியால், ஊழ்வகையாலும் அசாக்கிரதையாலும் பசி, கொலையால்வரும் அபாயங்களை நிவர்த்தி செய்துகொள்ளத்தக்க அறிவும் சுதந்தரமுமில்லாத சீவர்கள் விஷயத்தில் அவைகளை நிவர்த்திசெய்விக்கத்தக்க அறிவும், சுதந்தரமுமுள்ள சீவர்கள் வஞ்சியாமல் தயையினால் நிவர்த்திசெய்விப்பதே சீவகாருணியத்திற்கு முக்கியமான லட்சிய மென்றும், அதில்சத்தியமாக நம்பிக்கைவைத்துப் பசித்தசீவர்களுக்கு ஆகாரத்தால் பசி நீக்கியும், கொலைப்படுஞ் சீவர்களுக்குச் செய்வகையால் கொலைநீக்கியுந் திருப்தி யின்பத்தை யுண்டுபண்ணுவதே மேலான பிரயோசனமென்றும் அறியவேண்டும். பசி, கொலை, பிணி, எளிமை பயம், இச்சை யென்பவைகளால் வரும் அபாயங்களைமாத்திரம் நிவர்த்திசெய்விப்பது விசேஷமென்று குறித்தது என்னென்றறிய வேண்டில்,

அருட்பிரகாசம்.

ஜீவகாருணிய ஒழுக்கத்தில் அபர ஜீவகாருணியமென்றும் பரஜீவகாருணியமென்று மிருவகையாம். அவற்றில் பசிநீக்கலும் கொலைநீக்கலும், பரஜீவகாருணியமாதலால் விசேஷமாகக் குறிக்கப்பட்டதென்றறியவேண்டும்; அன்றியும் பசியினால் வருந்துகின்ற ஜீவர்களுக்குப் பசியை நிவர்த்திசெய்விக்கின்ற தயையுடையவர்கள் தாகம் நீங்குதற்குத்தண்ணீர் கொடாமலிரார்கள். தண்ணீர் கொடுப்பது பிரயாசமுமல்ல, தண்ணீர் ஏரி, குளம், கால்வாய் முதலானவிடத்தும் இருக்கின்றது, தாகத்தால் மாற்றிக்கொள்ளத்தக்க யேகதேச அபாயம் நேரிடுமேயல்லது அதனால் தேகத்திற்கு ஆனிநேரிடாது. பசியினால் மாற்றிக்கொள்ளக்கூடாத கெடுதி தேகத்திற்கு நேரிடும். பசியினால் வருந்துன்பத்தை நிவர்த்திசெய்விக்கத்தக்க தயவுடையவருக்கு பிணியினால் வருந்துன்பத்தை நிவர்த்திசெய்விப்பதற்குத் தயவுண்டாகாமலிராது. பசி மிகுதியினாலேயே பிணிகள் விருத்தியாகின்றன, ஆகாரப்பக்குவங்களாலேயே அப்பிணிகள் நீங்குகின்றன, பிணிக்கு வேறுமருந்து கொடுப்பினும் பத்திய ஆகாரமே தேகம் நிற்பதற்கு அவசியமான ஆதாரமாயிருக்கின்றது, பிணியோடு நெடுநாள் தேகத்தை வைத்திருக்கக் கூடும். ஒருநாளாகிலும் ஆகாரமில்லாமல் தேகத்தைவைத்திருக்கக்கூடாது. பசித்தவர்களுக்கு ஆகாரத்தால் பசிநீக்குவிக்கின்ற தயவுடையவர்களுக்கு இச்சையால் வருந்துன்பங்களை நீக்குவிப்பதற்குத் தயவு வராமலிராது, ஜீவர்களுக்கு உள்ளபடி பசிநேரிடுமாகில் ஆகாரத்திலல்லது மற்றொன்றிலு மிச்சையேயிராது, ஆகாரங்கிடைக்கினும் பசிதீர்ந்தவர் தம்மிச்சையைச் சிறியமுயபற்சிகளால் முடித்துக்கொள்ளவுங்கூடுமல்லது சமாதானஞ் செய்துகொள்ளவுங்கூடும். இச்சையோடு பலநாள் தேகத்தை வைத்திருக்கலாம், பசியோடு ஒருநாளும் வைத்திருக்கமுடியாது, பசித்தஜீவர்களுக்கு ஆகாரத்தால் பசியைநிவர்த்திசெய்விக்கின்ற தயவுள்ளவர்க்குச் சுதந்தரமற்ற ஜீவர்களது எளிமையை நீக்கத்தயவுவாராமலிராது. பசியால் வருந்துகின்ற எளிமைக்கு மேற்பட்ட எளிமையேயில்லை. எளிமையைச்சிலநாள் சென்று மாற்றிக்கொள்ளக்கூடும் பசியை யவ்வாறு மாற்றிக்கொள்ளக்கூடாது, எளிமையோடு தேகத்தை வைத்திருக்கக்கூடும் பசியோடு வைத்திருக்கமுடியாது, பசியை நிவர்த்திசெய்

விக்கின்ற தயவுடையவருக்குப் பயத்தை நிவர்த்தி செய்விப்பதில் தயவு வராமலிராது, பசியினால் வரும்பயத்துக்குங் கொலையினால் வரும்பயத்துக்கும் மேற்பட்ட பயமே யில்லை. பயத்தை உபாயத்தால் நீக்கிக்கொள்ளக்கூடும். பசியை உபாயத்தால் நீக்கிக்கொள்ளக் கூடாது. பயத்தோடு தேகத்தை வைத்திருக்கலாம் பசியோடு வைத்திருக்கப்படாது. பசியினால் வருந்துன்பங்களும் அவத்தைகளும், கொலையினால்வரும் அவத்தைகளுந் துன்பங்களுந் தம்முள் ஒத்திருக்கின்றன. ஆகலால் பசியினால் வருந்துன்பத்தையும் கொலையினால் வரும் துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியத்திற்கு முக்கியலட்சிய மென்றறியவேண்டும். (தொடரும்.

அன்பு.

(மலர் 1. இதழ் 3. பக்கம் 85-ன் தொடர்ச்சி.)

அளவைகளாலளக்கமுடியாத மலைபோன்ற கடவுளை அன்பென்னும் பிடியினு லளந்திடுதற் கூடும். எவ்விடங்களிலும் பிரவேசிப்பதற்கரிய ஆண்டவனை அன்பாகிய சிறு குடிசையில் யெழுந்தருளச் செய்யலாம். எப்பேர்ப்பட்ட வலைகளிலுஞ் சிக்காத பரம்பொருளாகிய இறைவனை அன்பாகிய வலையிலே சிக்கும்படிச் செய்யலாம். எவ்விதத்திலும் அமர்ந்திருப்பதற்கரிய அமுதம்போன்ற நம்முண்மையை அன்பெனும் காத்திலமரச் செய்யலாம். எந்தவகையிலும்| அடக்கமுடியாத ஆனந்தக்கடலை அன்பாகிய ஓர் குடத்திலே அடக்கிவிடலாம். எந்தவிடத்திலும் வியாபகமாகிய அறிவை அன்பென்னும் உயிரினிடத்து விளங்கச்செய்யலாம். கரணங்களுக்கும் இந்திரியங்களுக்கு மெட்டாதஅவ்வளவுநுட்பமான ஒளியை அன்பென்னுமோர் அணுவிலே பொருந்தக்காணலாம். அன்பையே சிவமாகப் பார்க்கலாம் எனஸ்ரீமத் வள்ளலார் கூறியிருக்கின்றனர். ஆதலால் நாம் அன்புநெறியே பெருநெறியாகக் கொள்ளுதல்வேண்டும். உலகத்திலே யுள்ள ஒவ்வொரு சீவர்களும் நமதுரிமைச் சகோதரர்களேயாவர். புல்பூண்டுமுதற் பலவுயிர்களிடத்தும் இரக்கச் சிந்தனை யுடையராதல் அத்தியாவசியம். எனஸ்ரீமத்வள்ளலார்.

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன் பசியினு லிளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறு தயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்து கின்றோரென் னேருறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மானிகளா யேழைகளாய்நெஞ் சிளைத்தவர்தமைக்கண்டேயிளைத்தேன்

நலிதரு சிறிய தெய்வமென்றையோ நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர வாடு பன்றிகுக் குடங்கள் பலிக்கடா முதலிய வுயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவுங் கண்டே புந்திநொந் துளநடுக்குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில் கண்ட காலத்திலும் பயந்தேன்.
[பயந்தேன்

துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத் தொடங்கிய போதெல்லாம்
கண்ணினு லையோ பிறவுயிர் பதைக்கக் கண்ட காலத்திலும் பதைத்தேன்
மண்ணினில் வலையுந் தூண்டிலுங் கண்ணி வகைகளுங் கண்டபோதெல்லாம்
எண்ணி யென்னுள்ள நடுங்கிய நடுக்க மெந்தைநின் திருவுளமறியும்.,

என்றுங் கூறியிருக்கின்றனர். அன்றியும் ஸ்ரீமத்சுவாமிகளின் உத்தமஞான மாணுக்கர்களிலொருவராகிய கல்பட்டு இராமலிங்கபிள்ளை என்பாரோடு புதுப்பேட்டைக் கிராமத்திற்கோர்தினம் வண்டியிலேறிச் செல்லுங்கால் மாணுக்கனின் தொடையிற் றலைவைத்துறங்குவதுபோற் படுத்தவள்ளலார் ஆற்றுப்பெருக்கன்ன கண்ணீர் வடித்துக் கொண்டே யிருந்தனராம். அது கண்டு ஆற்ருராய்த் தன்னுள்ளத்தி லிவ்வாறு சுவாமிகள் கவலையடைந்து கண்ணீர் பெருக்கற்குக் காரணமென்னை யென்றையுற்ருராய்ச் சிந்தித்த மாத்திரத்தில் வள்ளலார் உணர்ந்து அன்ப! நீ உன்னியவாறு யாமடையும் பேற்றினைப்பெற்றுக்கொண்டோம். எமக்கெனஎவ்விதக் கலக்கமுமின்று. எம் போன்ற உயிர்க ளெக்காலத்திலே யாமடைந்த இன்பத்தை யடையும் என்னும் கருணையினுலே கண்ணீர் வடிக்கின்ருேமென்றனராம். அதைக்கேட்ட கல்பட்டு சுவாமிகளுந் தானுங் கண்ணீர் வடித்தனராம். ஆதலால் தாம்சுவானுபூதிச் செல்வராயிருந்தும் உலகிற்குண்மை யன்புடையாராயிருந்தா ரென்ருல், மற்றனைவருமிரக்கம் பாராட்டுதலவசியமென்பது வெள்ளிடைமலையாம். இது பற்றியே ஸ்ரீமத் வள்ளலார்,

இதுவரை யடியே னடைந்த வெம்பயமு மிடர்களுந் துன்பமுமெல்லாம்
[விதுநின்

பொதுவளர் பொருளே பிறர்பொருட் டல்லாற் புலையனேன் பொருட்டல
மதுவளர் மலர்ப்பொற் பதத்துணையறிய வருத்தனன் அடியனேன்றனக்கே
யெதிலுமோராசை யிலையிலை பயமு மிடருமற் றிலையிலை யெந்தாய்

என்னளவிலையே யென்னினும் பிறர்பா லெய்திய கருணையா லெந்தா
யுன்னுறுபயமு மிடரு மென்றன்னை யுயிரொடுந் தின்கின்ற தந்தோ
வின்னுமென் றனக்கிவ் விடரொடு பயமு மிருக்கிலென் னுயிர்தரியா
தன்னையுங் குருவு மப்பனுமான வமுதனே யளித்தரு ளென்னையே.

பயத்தொடு துயரு மறைப்பு மாமாயைப் பற்றொடுவினையு மாணவமுங்
கயத்த வன்மயக்கு மருட்சியு மெனதுகருத்திலே யினியொரு கணமும்
வியத்திடத் தரியேனிவையெலாந் தவிர்த்துன் மெய்யருளளித்திடல்வேண்டு
முயத்தரு வாயே லிருக்கின்றே னிலையே லுயிர் விடுகின்றனனின்றே.

அன்பு

ஐயநான் பயத்தாற் றுயரினு லடைந்த வடைவையுண் ணினைத்திடுந்தோறும்
வெய்யதீ மூட்டி விடுத்த லொப்பதுநான் மிக விவற்றுவிளைத்திட்டேன்
வையமே லினிநா னிவைகளா விளக்க வசமிலே னிவையெலாந்தவிர்த்தே
யுய்யவைப் பர்யே லிருக்கின்றே னிலையே லுயிர் விடுகின்றனனின்றே.

எனப் பெருவிண்ணப்பத்திற் கூறியிருக்கின்றனர். "ஊரார்பிள்ளையை ஊட்டிவளர்த்தாற் றன்பிள்ளை தானேவளரும்,, என்ற பழமொழிக்கிணங்க நாம் உள்ளபடியே உயிர்களின் மாட்டுக்கருணையைப் பாராட்டவேண்டும். "உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பு முடையவர்களெல்லா நம்முறவினத்தாரல்லர் புறவினத்தார்" எனவும் "கொலைபுரிவார்தவிர மற்றை எல்லாரு நினது குலத்தாரே நீயெனது குலத்து முதல்மகனே" எனவும், "வன்புடையார் கொலைகண்டு புலையுண்பார் சிறிது மரபினரன்றுதலினல் வகுத்த வவாள வில் அன்புடைய வென்மகனே பசிதவிர்த்தல்புரிக வன்றி வருட்செய லொன்றுஞ் செயத்துணியேல்,, எனவுங்கூறியிருக்கின்றனர். ஆதலின் ஆத்மஞானத்தைப்பெற்ற அனுபூதிமான்களெல்லாம் "உலகத்திரளெல்லா மருவிக்கலந்து வாழ்வதற்கு வாய்த்த தருணமீதென்றே வாயேப்பறையா யறைகின்றே னெந்தாய் கருணை வலத்தாலே,, ஏனஇவ்வுலகிற் கன்பை ளைர்த்திருக்கின்றனர். இப்பெரியார்களின் பெருங்கருணைத் திறத்தா லன்றோ நாம்உயிர்வாழ்கின்றோம். நாம் அப்பெரியாரின் கட்டளைப்படி நடக்கக் கடமைப் பட்டிருக்கின்றோமன்றோ; ஆத்மஞானத்திற்கு அடிப்படையாகவுள்ள அன்பின் கிளர்ச்சியில்லாது நாம்ஆத்மஞானத்தை அடைவதெப்படியோ? ஆத்துமஞானத்தை அடைந்தவர்களும் ஆதம ஞானத்தை அடைய விரும்புவர்களும் அன்புடையாராதல் அ வ சி ய ம். உலகமென்பது உயர்ந்தோர் மாட்டு எனவும், "சுவையொளி ஊறு ஓசை நாற்றமென் றைந் தின் வகைதெரிவான் கட்டே யுலகு" எனவும் ஆன்றோராருளிய வாக்கியங்களின்படி உலகத்தை நல்லரு ணெறியிலே நின்று உண்மை அன்பின் வழியிலே திருத்திச் சன்மார்க்க வழியிலே நடத்தக் கடமை பட்டவர்களாதலின் எவ்வுயிர் மாட்டு மன்புடையாராயும், எவ்வுயிர்த்திரள்களும் அன்புடையாராதல் வேண்டுமென்று, மனமொழி மெய்களா லுணர்த்தியும், மொழிந்தும், செய்தும் காட்டியருளினர். நாமும் பொதுநெறியிலே எல்லாவுயிர்களிடத்து மன்புடையாராய்ச் சன்மார்க்கவழியிற்பழக எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக.

(தொடரும்)

முக்கிய கவனிப்பு.

(96-வது பக்கம் "உண்மைமனிதர்,, 10-வதுவரியில்)

"தேகத்திலும் மனதத்துவத்திலும் மிகுத்து மற்றை இரண்டுதத்துவத்தில் குறைவுற்றுக் காணப்படினும்ம, தேகம் மனம் புத்தி ஆகிய மூன்று தத்துவத்தில் மிகுத்து மற்றைய ஆத்துமதத்துவத்திற் குறைவாகக் காணப்படினும் "என்பன விட்டுப்போனபடியால்தயவுசெய்து வாசித்துக்கொள்க,

அருட்பிரகாசம்.

ஸ்ரீமத், இராமலிங்க சுவாமிகள்.

தில்லையாளி, த. வேதியப்பிள்ளை அவர்கள்

(மலர் 1. இதழ் 3. பக்கம் 79-ன் தொடர்ச்சி)

திருவருட்பிரகாச வள்ளலார், தாம்நிறுவின சடாந்த சமரச சுத்தசன்மார்க்க சங்கத்திற் சேர்ந்தவர் அனுசரித்தொழுகுமாறு "சீவகாருணிய வொழுக்கம்" என்ற உயர்நெறிக் கட்டுரை ஒன்றை வரைந்தருளினர். அக்கட்டுரையின் உயர்வும், அழகும், அருமையும், அதனைப்படிப்போரே உணர்வர். சீவகாருணியத்தைப்பற்றி எடுத்துரைக்காத மகான்களிரார். எந்தச்சமயங்களும் சாத்திரங்களும்,ஒழுக்கநூல்களும்,அறவுரைகளும்,பெருநெறிச்சென்றபெரியார்சரித்திரங்களும் சீவகாருணியத்தையே அடிப்படையாகக்கொண்டு நிலவுகின்றன. சீவகாருணியமென்பது மனிதன் தனைப்போன்ற சீவர்களிடத்தும் தன்னினுந் தாழ்ந்தவுயிர்களிடத்தும் காட்டுந்தயை. சீவகாருணியமென்றாலும், அன்பென்றாலும், இரக்கமென்றாலும் பொருந்தும். அது பக்தி, கருணை, அருள் வென்பனவாதிய பெயர்களும் பெறும். பக்தியென்பது அடியார்கள் ஈசுவரனிடத்திலும் கடவுளருள்பெற்ற ஆசாரியரிடத்திலும் செலுத்தும் அன்பைக்குறிக்கும். கருணை, அருள் என்பன, கடவுள் தம்மடியாரிடத்துக் கொள்ளும் இரக்கத்திற்குப் பெயராகும். ஆகவே இவைசொல்லினல் வேறுபடினும் பொருளால் ஒருதன்மையனவாய் உயர்ந்தோர் தாழ்ந்தோர் மாட்டும் தாழ்ந்தோர் உயர்ந்தோர் மாட்டும் காட்டும் அன்பைக் குறித்து நிற்கின்றன. புண்ணியவசத்தினற் பெறுதற்கரிய மானிடதேகத்தைப் பெற்றவர்கள், தம்போன்ற மானிடதேகத்தில் வசிக்கும் ஆன்மாக்களெல்லாம் ஒன்றென்றும், அவைதேகத்தில் வேறுபட்டிருப்பினும், ஒன்றற்கொன்று தொடர்பும் உரிமையும் உடையன வென்றும், உணர்ந்து, தம்மைப்போல் பிறரையும் நேசித்து, ஒழுகுதல் கடமையாம். இதுவே ஆன்மநேய வுரிமைப்பாடென்று சொல்லப்படும். ஒவ்வொருமனிதனும் ஆன்மநேய வுரிமைப்பாட்டினுண்மையை யுணர்ந்து சீவகாருணிய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்துச் சுத்தசன்மார்க்க சங்கத்தைச் சார்ந்தொழுகுதலே உடலெடுத்ததின் பயனாகிய ஆன்ம லாபத்தை அடைவதற்குரிய வழியாம்.

(தொடரும்)

தமிழர்.

இல்லையாளி.

ஸ்ரீமான், நா. தம்பியப்ப செட்டியாரவர்கள்.

(மலர் 1. இதழ் 3. பக்கம் 88-ன் தொடர்ச்சி)

நிற்க, தமிழ் மூதாதையர்களின் கொள்கைகளுள் ஸ்திரி புருஷர்மனமுங் கண்ணும் பொருந்துவதே மணமெனக்கொண்ட ஓர் கட்டுப்பாடு சாலச்சிறந்ததேயாகும். வயதுவந்த பெண்களையே அக்காலத்தில் நம்முன்னோர் மணஞ்செய்து கொடுத்தலென்னும் வழக்கத்தையே பெரிதாகக்கொண்டிருந்தனரெனத் தெரியவருகிறது. பெரும்பாலும் அடக்கம், ஒழுக்கம், நடுவு நிலைமை, பிறர் மனை நயவாமை, வெஃகாமை, புறங்கூறாமை, தீவினையச்சம், அழுக்காறாமை, பொறையுடைமை முதலிய நற்குணங்களே முன்னோர்களால் கையாளப்பட்டு வந்தன. விருந்தோம்பலே இல்லறதருமங்களுக்குள் மிகமேலானது. மேலும், இளமையாக்கையும், மற்றும் உலகின்பங்கள் பலவும் அழியத்தக்கவை யென்றும், நிலையான உறுதிப்பொருள் எய்தவேண்டுவதே மானிட வாழ்க்கையின் மேலான எண்ணமென்றும், பண்டைத்தமிழ் மக்கள் நன்குணர்ந்தவர்களா யிருந்தனர். ஏகபத்தினி விரதமென்பது அக்காலத்தில் பெரும்பாலும் வழக்கத்திலிருந்ததில்லை எனத் தெரிய வருகிறது. மணமகன் தன்மனையாளை உடன்கொண்டு தன்னில்லத்துக்குச் செல்லுழீஇ அவள்தோழியர் சுற்றத்தார் முதலியோரும் அவளை அவன் தன்னுயுள்நாள்மட்டும் கைவிடாது பாதுகாக்கவேண்டுமெனவும் அவளை அன்புடன் ஆதரித்து வாழ்வேண்டுமெனவும் பலவாறு கூறி வழிவிட்டனுப்புவது வழக்கம். அரசனுடைய ஆலோசனைச் சங்கம், புரோகிதர், அமைச்சர், சேனபதியர், தூதர், ஒற்றர் என்னும் ஐம்பெருங் குழுவினராலாயது. இவ்வைம்பெருங்குழுவினரும் கூடிய சபையில் அரசன் வீற்றிருந்து தேசகாரியங்களை நடத்தி வருவது வழக்கம். கைத்தொழில்—: பயிர்த்தொழிலும் நெசவுத்தொழிலும் முக்கிய கைத்தொழில்களாயிருந்தன. பருத்திநூல் நூற்பது பெரும்பாலும் பெண்டிர்கள் வேலையே. அக்காலத்திலும் கடல்நீரைப் பாத்திகளிற்பாய்ச்சி உப்பு விளைவித்தனர். சாதிபேதமென்பதின்றி அவரவர் கல்வியறிவிற்குங் குணங்களுக்குந் தக்கவாறு தமிழ் நாட்டில் தமிழ்மக்கள் அக்காலத்தில் மதிக்கப்பட்டார்கள். (முற்றும்.)

அருட்பிரகாசம்.

மாணவர் பகுதி.

விடாமுயற்சி.

கற்றனவோம்பும் கருத்துள மாணவர்காள்!

இத்தலையங்கத் தொடர்மொழி 'விடாத' என்றிருந்து 'விடா' வென்றாகிய ஒரு ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தானும், 'முயல்' என்னும் ஒரு வினைப் பகுதி "சி" என்னும் விகுதியடைந்த தோர் தொழிற் பெயரானும் ஆக்கப்பெற்று, நாம் நம்காலத்தை வறிதே வீணிற் கழிக்காமல் சோம்பலை யகற்றி ஊக்கமுற்று ஆள்வினை யுடைமையில் இடையறாது முயன்று முயன்று நன்மை யடைந்தின்புறவேண்டுமென்னுஞ்செம்பொருளையும்பயக்குகின்றது

ஆகவே,

"தேடப் படும்பொருளைச் சிக்கனவா கப்புதைத்துக்
கோடிக் கொருநிமிடங்கொள்ளுகினுங்—கூடாத
வாணாளை வீண்கழிக்கும் மானிடரைப் போன்மயக்கம்
பூணார்போய் கண்டுதுறப் போர்."

என்னும் ஒழவிலொடுக்க வுபர்தர கூற்றுப்படி காலத்தின் அருமையினையும் பெருமையினையு மோர்ந்து, ஒரு நிமிஷத்தினை யும் அவத்திற் போக்காது நற்கருமங்களிற் பிரவர்த்திப் போமா யின், சிக்கனக்காரனொருவன் தனது வருமானத்தில் சிறிது சிறிது பொருள் மிகுத்து முடிவில் ஒருதனபதியாமாறு, நாமுங் கல்வி கேள்வி யறிவொழுக்கங்களிற் சிறந்தோராவோம். ஆனால் இத்திறச்செய்கையினை யியற்றற் கேற்ற காலத்தைச் சிறிதும் தவற விடாமலும், இக்கணம் முடித்தற்குரியது யாது? மறுகணம் புரிதற் கேற்றதுயாது?என்றெண்ணி ஒவ்வொருநிமிஷநேரத்தையும் சந்தே கசங்கடங்களில் வீணாய்க் கழித்துவிடாமலும், அவ்வகைத் தடு மாற்றங்களான் உடலையும் உளத்தையும் சோம்பலுக்குள்ளாக்கி துருப்பிடிக்கச்செய்து கொள்ளாமலும், நம்மனத்தை நற்றுறை யுள் நடத்துவிப்போமாக.

எற்றுக்கெனில், கடந்துபோன காலமும் அணைகடந் வெள் ளமும் மீண்டும் வாராதொழிவது மன்றிக் காலம் சூரிய அள வையால் அளத்தற் குரியதெனப் பொருள்படும்,

மாணவர்பகுதி.

தோற்றஞ்சான் ஞாயிறு நாழியா வைகலுங்
கூற்ற மளந்துநுந் நாளுண்ணு—மாற்ற
வறஞ்செய் தருளுடையீ ராகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதா ரில்.

என்னும் நாலடிக் கூற்றும் நன்கிருத்தலின் என்க.

அன்றியும்,

"மடிமடிக் கோண்டோழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து."

என்னும் பொய்யாமொழி அறிவில்லா னொருவன் தன்மனத்தின்கண் சோம்பலைக் கொண்டொழுகுவனேல் அவன் பிறந்த குடி அவன்மரிக்குமுன்னரேயே அழிந்துபடு மெனக்கூறுவதோடு,

"மடியை மடியா வோழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்."

எனவுங்கூறி, ஒருவர் தாம் பிறந்த குடியை நாளடைவில் மேன்மைக்குக் கொண்டுவர விரும்பினால் அவர்கள் சோம்பலை யறவே போக்கி, அந்தச் சோம்பலைக் கொன்று போட்டவர்களாகவே தங்களை எண்ணிக்கொண்டு முயற்சியோடு உழைக்கவேண்டுமென்றும், அதனான் (தொடரும்)

வைத்திய வித்தியார்த்திகளுக்கு
விஞ்ஞாபனம்.

நமது பத்திரிகையில் நூலாதாரத்தோடு "ச்யவனப் பிரகாசம்" என்ற அரிய ஔஷதமுறை உற்பத்தியான வரலாற்றை இரண்டோரு பக்கத்தில் வியாசமாக வரைந்து அனுப்பி வெளிப்படுத்துவோர்க்கு வெள்ளிப்பதக்க மோன்று பரிசளிக்கப்படும். ப—ர்.

நூல்வெளியீட்டு அறிக்கை.

எமது பத்திரிகையில் அடுத்தசஞ்சிகை தொடங்கிப்பிரதி மாதமும் தவறாமல் யாதேனும் உண்மை அநுபவநூல் வெளிவரும். அவற்றிற்குப் பிரத்தியேகமான எண்ணிட்டுப் பிரசுரம் ஆவதற்குத்தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அருட்பிரகாச

வள்ளலார் சமரச சுத்தசன்மார்க்கத்தைச் சுத்தசைவ சித்தாந்தப் பொருளொடு சார்த்திக் கூறியிருப்பதால், அச்சைவார்த்தத்தைத் தெற்றென விளக்குதற்பொருட்டாக, முதற்கண் சிவஞானபோதத்திற்குப் பேருரையாவது சிவஞானசித்தியார் என்பதை ஒப்புமை விளக்கிக்காட்டி வெளியிடுவோம், இச்சிறந்தநூல் சீகாழிப் பிரபல பிரபுவும், வித்துவசிரோமணியும் சைவநூல்கள் பலவற்றின் பிரகடனாசிரியரும் ஆகிய ஸ்ரீமான், ச. சதாசிவமுதலியாரவர்கள் வரைந்து அனுப்பியது. இந்நூலை ஊன்றிவாசிப்பவர்களுக்கு அப்பிரபுவின் வடமொழி தென்மொழி ஆராய்ச்சியும் ஆங்கிலா பாஷா ஞானமும், இலக்கிய இலக்கண விற்பனமும், வேதாந்த சித்தாந்த நூலாராய்ச்சித் திறமும் புலப்படும். இதுபோன்ற பிறநூல்களையும் ஆன்றோர்கள் எழுதி அனுப்புவார்களாயின், உலகத்திற்குப் பேருபகாரமாக இருக்குமெனச் செந்தமிழ்ப் புலவர்களை வேண்டுகிறோம். அவ்வம் மதங்களின் உண்மைகளையும், அவ்வச்சமயங்களின் கொள்கைகளையும் உள்ளனவற்றை உள்ளவாறே வெளியிடக்கருதும் வித்துவ சிகாமணிக்கு எமதுபத்திரிகை என்றும் இடந்தருமென்பதற்கு ஐயமில்லை. நல்லுரைகளாலும் இன்பொழிவுகளாலும் விளங்குவதே அருட்பிரகாசம். அருட்பிரகாசம், தெருட்பிரகாசம், அதுவே பரப்பிரகாசம், சிவப்பிரகாசம்.

சுப்பிரமணிய விளக்கம்,

(மலர் 1. இதழ் 2. 90-ம்பக்கம் தொடர்ச்சி.)

ஸ்ரீமத் திருவருட்பிரகாசவள்ளலார்.

இவ்வண்ணமாய் அனாதிதொட்டு இன்றுவரையில் சென்ற நாட்களிலுள்ள அருணகிரியார், குமாரகுருபரர், நக்கீரர் முதலிய மகான்கள் தொண்டுசெய்து உத்தமஞானிகளாய் நித்தியமுத்தர்களாய் விளங்குகிறார்கள். ஆதலால் நாம்யாவரும் அவ்வுண்மைக்கடவுளை வேதாகம விதிப்படி உண்மையாய்ப் பத்திசெய்து அவர்அருளைப்பெறவேண்டும். கடவுளது திருவருளை எவ்வாறு பெறக்கூடும்? அருளென்பது கடவுள்தயவு. ஜீவகாருணியமென்பது ஜீவர்கள்தயவு. ஆதலால் சிறு வெளிச்சத்தைக் கொண்டு பெருவெளிச்சத்தைப் பெறுவதுபோல் சிறிய தயவாகிய ஜீவதயவைக் கொண்டு பெருந்தயவாகிய கடவுளருளைப் பெறவேண்டும். அக்கடவுள்

தயவாகிய அருள் எத்தன்மையுடையது. நமது ஆன்மஅறிவாகிய புத்தி தத்துவத்துக்கு நன்மைதீமையை விளக்கிக்காட்டுவதாயும் வேதாகம கலைகளைக்கொண்டு நன்மை யாதிகளைவிதிப்பதாயும் அறிபவர்களின் தாத்திற்கொத்ததாயும் அறிபவர்கள் எந்தவஸ்துவை அறிகின்றார்களோ அந்தவண்ணமாயுமுடையது. அத்தன்மையான அருள் பிண்டஅண்டத்தில் எவ்வண்ணமாய் விளங்குகின்றது; காண்பார்காணுமிடம் காணப்படுமிடம். அறிவாரறியுமிடம் அறியப்படுமிடம். தூண்டுவார்தூண்டுமிடம் தூண்டப்படுமிடம். சுவைப்பார் சுவைக்குமிடம் சுவைக்கப்படுமிடம. அனுபவிப்பார் அனுபவிக்குமிடம் அனுபவிக்கப்படுமிடம். கருதுவார் சருதுமிடம் கருதப்படுமிடம். மூகருவார் மூகருமிடம் மூகரப்படுமிடம், கேட்பார் கேட்குமிடம் கேட்கப்படுமிடம். முதலியவாய் விளங்கும். இவ்வண்ணமாய் விளங்கும் அருளை நாம்பெறுவதற்கு உபாயம்என்ன? புத்திதத்துவத்தால் நன்மைதீமையை விசாரித்து நன்மையே உருவாய்விளங்கும் பெரியாரைத்துணைகொண்டு அவரால் கட்டளையிடும் திருப்பணியைக் கைக்கொண்டு இடையறாது செய்யில் அவ்வருளைப்பெறலாம். நன்மைதீமை என்பவை யாவை? நன்மைதீமையென்பது புண்ணியபாவம். புண்ணியமென்பது ஆரம்பத்தில் செய்வதற்கும் அனுபவித்தற்கும் முயற்சிப்பதற்கும் துக்கமாயும் பின்சுகமாயும் விளங்கும். பாவமென்பது ஆரம்பத்தில் சுகமாயும் பின்துக்கமாயும் விளங்கும். புண்ணியபாவங்கள் நம்மைஎவ்வாறடைகின்றது? மனம் வாக்கு காயம், என்னும் மூன்றினாலும் அடையும். மேலும் மனத்தினிடத்தில நால்வகையும், வாக்கினிடத்தில நால்வகையும். சரீரத்தினிடத்தில் நால்வகையும் ஆகபன்னிரண்டுவகையாய் நம்மையடையும். அவையாவன? மனத்தினால் பரதாரகமனம் பண்ணநினைத்தல். அன்னியருடைய சொத்தை கிரகிக்க நினைத்தல் அன்னியருக்குத் தீங்குசெய்யநினைத்தல். முடியாதகாரியங்களை நினைத்தும் அக்காரியம்அன்னியர்களுக்கு முடிந்ததை நினைத்துப்பொறாமை யடைதல். இதுநான்கும் மனத்தினால் செய்யும்பாவங்கள். தேகத்தினால் பிறர்மனைவியைத் தழுவுதல். புசிக்கத்தகாத வேதவிரோத ஆகாரங்களைப்புசித்தல், அன்னியர்களை இம்சைசெய்தல், தீங்குசெய்கிறவர்களைத் தடுக்காமல் அவர்களுக்கு உபகாரஞ்செய்தல், இன்னான்குந் தேகத்தாலுண்டாகும் பாவங்கள். இதுபோன்றவைகளைத்தவிர்த்து அன்னியர்களுக்கு நன்மை உண்டாக நினைத்தல், பொறாமை யடையாதிருத்தல், அன்னிய சொத்தை தனதாக்க எண்ணாதிருத்தல், தனதுபெண்டீர்தவிர அன்னியமான பெண்களை தாய் சகோதரி முதலியவர்களாய் சிந்தித்தல் இதுமனத்தால் வரும் புண்ணியம். பொய்சொல்லாமை கோட்சொல்லாமை இன்சொல்லாடல் தோத்திரம் செய்தல், இந்நான்கும் வாக்கினாலுண்டாகும் புண்ணியங்கள். அன்னியர்களுக்கு தீங்குண்டாகுங்கால்விலக்கல் முதலான

அருட்பிரகாசம்.

...க்ருத்தியங்களெல்லாம் புண்ணியங்கள். அறிந்துசெய்தபாவங்களும் அறியாதுசெய்தபாவங்களும் எவ்வாறு நீங்கும். அறிந்தபாவங்கள் செய்தபின் தனக்குப்பாவம்செய்ததாக எவ்வகையிலாவதுதெரிந்தபின் நாம் பாவச்செய்கையை முன்னமே தெரிந்தும் மோகத்தாலும், மறதியாலும், அபிமானத்தாலும், அகங்காரத்தாலும், செல்வச்செருக்காலும், தாக்ஷண்ய உடன்பாட்டாலும், உணவுபற்றியும், புகழ்பற்றியும் வழக்கம்பற்றியும் செய்துவிட்டோமேயென்று பச்சாதாபப்பட்டு பெரியோர்களைஅடுத்து அவர்களால் நேமனம்செய்யப்படும் பிராயச்சித்தங்களைக் கைக்கொண்டு அவ்வண்ணம் இச்சரீரத்தை தவத்தாலும் விரதத்தாலும் இளைக்கச்செய்வதுமன்றி யாத்திரையாதிய புண்ணிய ஸ்தலங்களிற்சென்று வசித்து இயன்றவளவில் அன்னவிரயஞ்செய்தால் நீங்கும். மேலும் சத்தியற்றவர்களாயும் வார்த்தீகர்களாயுள்ளவர்கள் மகான்களுக்குத்தொண்டுசெய்தால் நீங்கும். மகான்கள் நேரிடாதபக்ஷத்தில் பச்சாதாபத்துடன் பாபகாரியங்களைச் செய்யாமலும் பாபிகளுடைய கூட்டத்தில்பழகாமலும் திருவருளைச்சிந்தித்து அவர்கள் தாத்திற்கொத்த தெய்வங்களை சிந்தித்துக்கொண்டிருந்தால் நீங்கும். அறியாதபாவங்கள் யாதெனில் நடக்குங்காலத்திலும், நீராடுங்காலத்திலும் சயனகாலத்திலும் தனக்குத்தோன்றாமல் நேரிடும்பாவங்களாம். இதன்னியில் மனதிற்குப்புலப்படாமலும்உண்டாகும். இதுகள்தியானஞ்செய்யும் செபத்தாலும், பாராயணத்தாலும், தோத்திரத்தாலும், விருந்துபசரித்தலாலும், தெய்வம் பரவலாலும் நீங்கும். பிராயச்சித்தமுதலியதுகள் செய்யாவிட்டால் பாவங்களால் அடையுங்கதியென்ன? மனத்தால்செய்யும் பாபங்கட்குச்சண்டாளாதி சரீரமுண்டாகும். வாக்காற்செய்தபாபங்கட்கு மிருகம்முதலான சரீரமுண்டாகும். தேகத்தால்செய்யும் பாவங்கட்கு மரம்முதலான சரீரமுண்டாகும். வேதாந்திகள் பாபம்முதலிய கருமங்களும் புண்ணிய முதலிய வேதக்களும் நமக்கில்லை. நாம சர்வசாக்ஷி என்கின்றார்களே. அஃதென்ன? தேகவாசனை, இந்திரியவாசனை, காரணவாசனை பிராணவாயுவின் செயற்கையாலுண்டாகும் வேறுபாடுமுதலிய நன்மைகளில் சலிப்பற்று, ஆகாரம், நித்திரை, பயம்முதலியதுகளில் தான்சலித்தும் சோர்ந்தும் திடுக்கிட்டும் இல்லாமல் நிவாததீபம்போல் விளங்கும் சீவன்முத்தர்கள் சமுகத்தில் பாபகிருத்தியங்கள் நடவாது. புண்ணியங்களும் பிரயோசனம்பற்றி செய்யார்கள். பொன்னும் ஓடும் சரியாகக்காண்பார்கள். அத்தன்மையுடைய நித்திய முத்த சத்த ஞானதேகசித்தர்கட்கு பாபபுண்ணிய மில்லையென்று அவர்கள் சொல்லவேண்டியதில்லை. நமக்கேதெரியும். மேலும் அவர்கள் இந்த பவுதிகசரீரத்தில் வசித்தாலும் சரீரமாகிய தத்துவதாத்வீகங்கள் இப்போது நமக்கு அசுத்ததேகமாயும், அசுத்தபொறியாயும், அசுத்தகரணமாயும், அசுத்தஅனுபவமாயும், அசுத்தஅறிவாயு மிருப்பதுபோலிராது.

தந்தபடத்தைப்போல் காரியத்தில் இலதாயும் காரணத்திலுளதாயும் அறிவேவடிவாய், அறிவேபொறிவாய், அறிவேமனமாய், அறிவே அழகாய், அறிவேஉருவாய், அறிவேஉணர்வாய், அறிவேஅனுபவமாய், அறிவே அறிவாய் விளங்கும்.

சக்கரவர்த்தி
சித்திவளாகம்
10—8—27.

கதம்பம்.

உத்தரஞான சித்திபுரத்து சிற்சபையமைப்பு.

(மலர் 1. இதழ் 3. பக்கம் 94-ன் தொடர்ச்சி.)

உத்தம ஆயாதி மத்திம வாயாதி சுத்தியும் முழத்தினும் விரலினும் அளக்கவேண்டும் காரியங்களும்.

கிருகம்-அறை-தொட்டிக்கட்டு என்னும் நாலுகட்டு-மண்டபம், சபை, பிரசாதம், கோபுரம், பிரகாரம், பலிபீடம், துவஜதண்டம், அதிஷ்டானம், ரதமுதலான வாகனங்கள், சிவிகை, கட்டில், தொட்டில், சப்ரமஞ்சம், கடை, கோட்டை, பசுத்தொழுவம், நெற்பிறை, எருமைத்தொழுவம், குதிரைலாயம், இவைகளுக்கும் விசேஷமான கூடாதி சாலாதிகளுக்கும், கல், செங்கல், சாந்து, மண், மரம் இவைகளுக்கும் முழத்தினும் விரலினும் அளவுசெய்து உத்தம ஆயாதிப்பொருத்தம் பதினாறைக்கொண்டும் மத்திய ஆயாதிப்பொருத்தம் பத்தைக்கொண்டும் தானம் சுத்தி பண்ணவேண்டும்.

உத்தம ஆயாதி பார்க்கவேண்டும் காரியம்.

லிங்கம் பேரம், சரசரணுதிவிக்கிரகம், பீடம், மனுஷ்யப்பிரதிமை, மிருகம், பக்ஷி, விருக்ஷம், சங்கமான பிராணிகள் இவைகளுக்கு யவையாவது விரலாவது முழமாவது இவைகளினால் உத்தம ஆயாதி சுத்திபண்ணவேண்டும்.

வயதின் பலன்.

ஆயுசு விருத்திபற்றி மிருத்திகைக்குக் கண்டவயதை நான்கிலும், மரத்துக்குக் கண்டவயதை எழிலும, சாந்து, செங்கல் இவைகளுக்குச்கண்ட வயதை 10லும் கல், ரத்தினம், சுவர்ன

முதலிய லோகங்களினால் ஆக்கப்பட்டவைகளுக்கு யுகாந்த மளவும் பிரமாண விசேஷத்தினாலும் முகூர்த்த விசேஷத்தினாலும் ஆயுள் விருத்தியைக் கற்பிக்க.

விசுவகர்மீயப்படி இவ்வகை ஆயாதி விவரத்தை நோக்குமிடத்து, முன்னோர் சுருதியுக்தி அநுபவங்களால் தமக்கும் தாம்வசிக்கும் இப் பூமண்டலத்துக்கும் மேலும்கீழும் உள்ள கிரகாதி மண்டலங்களுக்கும் ஈசுவரனுடைய சங்கற்பசக்தியால் நிரந்தரமாக என்றும் ஓரியைபுஉண்டு என்பது தெளிதலாகும். இனிஆன்மலாபப் பேற்றினை அடையவிரும்புவோர், தாம்எடுத்துக்கொண்ட தூலநிலையுடம்பின் வன்மை மென்மைகளுக்கும் பொருள்முதலியவற்றின் அளவுக்கும்ஏற்ப, தூலவுபாசனை செய்யத் தொடங்குவர். ஆன்மாக்களின் பக்குவங்களுக்குத் தக்கவாறு சூக்குமவுபாசனையும் அதிசூக்கும வுபாசனையும் செய்து அனர்த்தநிவிருத்தியும் ஆனந்தப்பிராப்தியும் பெறவாருமுளர். அன்னோரியல்பைக் கீழ்ப்போக்கிக் கூறுவேன். தூலவுபாசனையும் சூக்குமவுபாசனைக்கு அங்கமாகவே செய்யப்படவேண்டுதலின், உண்மைஞானநுபவநிலைக்கு ஏற்பவே யோகாங்கம் ஞானங்கங்களுக்கு ஏற்றதகுதியுடையதாக இருத்தல்வேண்டும். ஆகவே வேதாகமங்களும் சாஸ்திரங்களும் தடுமாற்றஞ் சொல்லாமலே ஞானபூசைக்கு ஏற்றவண்ணம் கிரியாபூசையையும், ஞானவேள்விக்கு ஏற்றவண்ணம் கிரியாவேள்வியையும், அந்தர்யாகபூசைக்கு ஏற்றவண்ணம் பகிர்யாகபூசையையும் ஒருபடித்தாகச் சொல்லும். இவ்வாறு தூலவுபாசனைக்கேற்ற மூர்த்திகளையும், மூர்த்திமான்களையும், பிரதிஷ்டாகிரமத்தையும், பிரதிஷ்டை செய்யவேண்டிய ஸ்தலங்களையும், அத்தானங்களில் அமைக்கவேண்டிய திருக்கோயிலையும், பிறவற்றையும்பற்றிக் கூறும்நூல்கள் பலவுள.

மானசார கிரந்தம்.

வேதத்தின்கண்ணே கூடமாகவும் ஆகமத்தின்கண்ணே வியக்தமாகவும் இதிகாசபுராணங்களிலே சுருக்கமாகவும் சிற்பசாஸ்திரங்களின்கண்ணே பொதுவாகவும் கூறப்பட்டிருக்கும் திருக்கோயிலமைப்பு மானசாரகிரந்தத்தில் ஸ்பஷ்டமாகவும் பிரதீதமாகவும் விலாசமாகவும் விசேஷமாகவும் கூறப்பட்டிருக்கிறது. சிற்சிலஆலயங்களில் செதுக்கப்பட்டிருக்கும் சிலாசாசனங்களினும் ஆலயநிர்மாணம் விவரிக்கப்பட்டுள்ளது. வடதேசத்து ஆலயங்களுக்கும் தென்தேசத்து ஆலயங்களுக்கும், தென்தேசத்துள்ளும் சோழதேசத்து ஆலயங்களுக்கும் பிறதேசத்து ஆலயங்களுக்கும், சோழதேசத்தும் ஓர்நாட்டின் ஆலயத்திற்கும் பிறநாட்டு ஆலயத்திற்கும், ஓர்வளநாட்டு ஆலயத்திற்கும் மற்றோர்வளநாட்டு ஆலயத்திற்கும், ஓர்வளநகர் ஆலயத்திற்கும் மற்றோர் வளநகராலயத்திற்கும்,

கதம்பம்.

ஓர்வளநகருள்ளும் ஓராலயத்திற்கும மற்றோராலயத்திற்கும, தேவர் இருடிகள் மன்னராதியர் பிரதிஷ்டைசெய்த ஆலயங்களுள்ளும் ஒருவர்செய்த ஆலயத்திற்கு மற்றோராலயமும் நிர்மாணத்தில் காலக்கிரமத்தில் மாறுபட்டிருக்கக் காண்கின்றோம். இச்சிற்ப விகற்ப பேதங்கள்யாவும் மானசாரத்தில் தெளிவாக விவரிக்கப்படுகின்றன. (தொடரும்.)

சாசன விற்பன்னர் கொள்கை.

	570 அப்பர் திருவவதாரம்.
	595 அப்பர் சமணரானது.
600-630 மகேந்திரவர்மன் குணபரன்.	610 அப்பர்மீண்டும் சைவரானது.
	639 சம்மந்தர்திருவவதாரம்
640-நந்திவர்மன் I	641 வாதாபி யுத்தம்.
	646 சம். செங்காட்டங்குடிவிஜயம்.
	651 அப்பர் திருப்புகலூரடைதல்.
	655 சம்மந்தர் பெருமண மடைதல்
780-830 நந்திவர்மன் II கழற் சிங்கன்	793 சுந்தரர் திருவவதாரம்.
	825 சுந்தரர் கைலைசெல்லுதல்.
840 வரகுணன் I	
862 வரகுணன் II	மாணிக்கவாசகர்.
985-1013 ராஜராஜன் I	990 நம்பிகள் திருமுறை வகுத்தல்.
1070-1117 குலோத்துங்கன் I	1080 பெரியபுராணம் அருளியது.

<u>பிரதிபந்தம்</u>—இஃது மூவகைத்து. (க.)பூதப்பிரதிபந்தம், இழந்துபோன பொருளின் நினைவு. அஸ்தி பாதிப் பிரியம் நாமரூபம். ஆகவின் நாமரூபங்களைத் தள்ளக்கடவாய், ஞானம் பிரகாசிக்கும். 2. வர்த்தமானப் பிரதிபந்தம், விஷயா சத்தி சமையாதியவற்றால் நீங்கும். பிரக்ஞா மாந்தம் சிரவணத்தால் ஒழியும். குதர்க்கமாகிய விபரீதார்த்தம் மனனத்காற்கெடும். விபரீததுராகிருதம் தேகாதிகளில் ஆத்ம புத்தி, வைராக்கிய சகித நிதித்தியாசனத்தால் தள்ளுண்டுபோம், 3. ஆகாமியப் பிரதிபந்தம் புண்ணியபாப மிசிரகர்மப்பலன். குருவாக்கியப்படி திருப்தி சகித உபரதியால்மாயும்.

இம்மூவகைப் பிரதிபந்த மொழியவே ஆனந்தப் பட்டோமென்றடி யப்பா முரசம் அருட்சோதி யானேமென் றடியப்பா முரசம்.

குரு—வேதாகமங்களின் உட்பொருளை மறைத்தது தமம். இவ்விருளை அகற்றுவதற்குப் போத பாநு அருட்பிரகாசர், இவர் அருளுருப் புனைந்த அம்பலவர். அம்பலவர் வந்தாரென்று சின்னம்பிடி, அற்புதஞ் செய்வதற்கென்றுசின்னம்பிடி. யாது அற்புதம்? ஜநநமரண பயங்களை நீக்கிப்பொன்னுருத் தந்தானென் றுந்தீபற பொன்னம்பலத்தானென் றுந்தீபற. அற்புதப்பேறு பெற்ற அருட்குரவர் ஆட்சியாவை? சிற்சபையும் பொற்சபையும் சொந்தமெனதாச்சு தேவர்களும் மூவர்களும் பேசுவதென்பேச்சு.

தெய்வம்—மதத்தலைவர் பெரியாரோ?பதத்தலைவர்பெரியாரோ? எவரும் எந்தலைவரையன்றி காணேமே, உம்தலைவர் பெயரை உரைப்பீரோ? உரைப்போம். உரைத்தற் கியலுமோ? இயலும். எங்கே உரை.

"பெருகியபே ரருளுடையா ரம்பலத்தே நடிக்கும் பெருந்தகையென் கணவர் திருப் பேர் புகலென் கின்றாய், அருகர் புத்த ராதியென்பே ணாரயண னென்பே னரனென்பே னாதிசிவ னென்பேன், பருகு சதா சிவனென்பேன் சத்திசிவ மென்பேன் பரமமென்பேன் பிரமமென்பேன் பரப்பிரம மென்பேன், துருவசுத்தப் பிரமமென்பேன் துரிய நிறைவென்பேன் சுத்தசிவ மென்பனிவை சித்து விளை யாட்டே."

பிரமமோ, சிவமோ—வேதம் கூறும் பொருள்தானே ஆகமங் கூறும் பொருள்? ஆம். நாமபேதம் ஏன்? பொருட்பேதம் உளதோ? பேதம் இல்லாதவிடத்து நாமங்கள் பலதிறப்படுவானேன்?

"பிரமமென்றுஞ் சிவமென்றும் பேசுகின்ற நிலைதான் பெருநிலையே யிந்நிலையிற் பேதமுண்டோ வெனவே, தரமறிய வினவுகின்றாய் தோழியிது கேணீ சமரசசன் மார்க்கநிலை சார்தியெனி லறிவாய், திரமுறவா யினுமெல்லா மாகியல்லாதாகும் திருவருளாம் வெளிவிளங்க விளங்குதனிப் பொருளாஞ், சிரமுறுமோர் பொதுவுண்மைச் சிவப்பிரம முடியே திகழ்மறையா கமம்புகலுந் திறனிது கண் டறியே."

கதம்பம்.

பரிணதவசனம்— யாவரும் இச்சிப்பது துக்கநீக்கமும் சுக அடைவுமாம். இவை சிவஞானத்தாலன்றி யடையப்படா. சிவஞானத்தை விளக்குவது பரமேசுரன் திருவாக்கு. அவ்வம்பலவர் வாக்கு அதிகாரிகளின் வேறுபாட்டிற்கேற்ப, கன்மம், பக்தி, யோகம், ஞானம் என்னும் நான்கினையும் கூறும். இவற்றுள் கன்மம் முதலிய மூன்றும் சித்த சுத்திக்கு ஏதுவாவன. ஞானம் ஒன்றே அநர்த்தநிவர்த்தி, ஆனந்தபிராப்தி ரூபமான முத்தியின்பத்தைத் தரும். ஞானத்தைப் பிரதிபாதிக்கும் வாக்கியங்கள் வேதோபநிஷத்துக்களும் ஆகமங்களும் திராவிட சுருதிகளுமேயாம். இவற்றுள் உண்மைச் சிவஞானத்தைப்பெறுதற் குரிய பெருநெறி சுத்த சிவ சன்மார்க்கம். இம்மார்க்கத்தை யுணர்த்தும் அருள்நூல் பக்குவவான மொழி.

ஸம்வாதனம்—பாரதபூமியிற் பிரமாண வசனம் பொய்யா மொழியாகிய வேதம். இஃது ஒன்று, மூன்று, நான்கு. இவற்றின் பொருள் ஒன்றேசிவம். சிவத்தோடு சம்பந்தமாகியது சைவம். அச்சம்பந்தமே அன்பு இவ்வன்பு ஒன்றே ஜாதிமத சமயங்களின் வேறுபாட்டைத் தோற்றவிடாது, அவிரோத வுணர்ச்சியை விளைவிப்பது. அன்பின் விளைவு சமரச ஞானாநுபவம். இவ்வன்பை முற்காலத்தும் இக்காலத்தும் எக்காலத்தும் இந்நாட்டுள்ளும் பிறநாட்டுள்ளும் வளர்த்தவர்கள் அருட்பிரகாசர்கள். தெற்குக் கடலினும் மேற்றிசைக் கோடியினும் இப்பிரகாசம் நமது உயர்ந்தோர்களாற் பரவியது. இதற்கத்தாக்ஷி பிளேக்கியர் பாரதர் கோத்தியர் வித்வானியர் ஆரியர் பூர்வகொள்கைகளே. எகிப்தியர் நாகரிகமும் எகிப்தும் சுமாரியரிடத்தினின்றும் தோன்றியவை. கி. மு. 3100–2300 யுள்ள சாசனங்கள் வடவாரியர் பெருமையையும் தென்றேசத்து உயர்ந்தோர் ஆட்சியையும் நமது கலைஞானங்களோடு ஒத்துக் கூறுவன.

பராஜயம்—டார்வின் சாஸ்திரியாரைப் புதுக்கினர் ஹக்ஸ்லி பண்டிதர்- அவரைப்புதுக்கினர் ஹேக்கல் நிபுணர். இவரால் நமது தேசத்தில் சிருஷ்டிவாதம் மறைந்து புராணேதிஹாசங்களுக்கு மலினம் நேரிடும்போற் றோன்றியது. பழைய வரலாற்றைக்கூறும் சர்க்காதிபஞ்சலக்ஷணங்களே என்றும் உண்மை என்பதை அநுபவம் விகிதம் சாக்ஷி மூலமாக நிரூபிக்கின்றார். வால்டன் சாஸ்திரியார் தமிழ்நூல்கள் கூறும் உலகத்தோற்றமே யதார்த்தமானது. மற்றையோர் யூகத்தாற் கூறுமது தோல்வி யடைந்தது. சீர்த்தி பெறு மம்பலவர் சீர்புகன்ற வாக்கு, செல்வாக்கு நல்வாக்கு தேவர் திருவாக்கு.

அருட்பிரகாசம்.

ஆஸங்கம்—வடக்குக்கும் தெற்குக்கும் எவ்வளவு தூரம்? வடதிசையாருக்குத் தென்திசையே தெரியாது என்பர் சிலர். இருமொழிக்கும் குரவர் ஒருவரே யென்பர் பலர். சமயநூல்களும் பிறவும் இம்மட்டும் அவ்விருதிசையாளர்க்கும் பாகுபாடு கூறிற்றில. சப்தபுரிகளுள் ஒன்று காஞ்சி, கங்கையே காவிரி. காசியினின்றும் போந்த அகஸ்தியரே தென்தமிழ் முனிவர். இந்நாட்டுத் தொன்முதுவெளிரே இருக்குவேதத்திற் கண்ட ராஜந்நியர். பெருங்கதையிற் கண்ட ஹேஹயரே பெரியபுராண மாகிய மாக்கதையிற்கண்ட எபர். ஆகஸ்திபமும் ருக்காதி வேதங்களைப்போல் அநாதியேறே. வடவேங்கடம் வடமொழிக்கும் தென்மொழிக்கும் வரம்புகாண சைவவித்தை பிரமவித்தை. பிரமமென்றும் சிவமென்றும் பேசுகின்ற நிலைதான் பெருநிலையே, இந்நிலையிற் பேதமுண்டோ எனவே தமமறிய வினவுகின்றாய், தோழி' இதுகேள் நீ, சமரச சன்மார்க்க நிலை சார்தியெனில் அறிவாய் வடக்கும் தெற்கும் சமீபத்துள்ளவை.

உத்தரஞான சிதம்பரம் ஆடித்திங்கள் பூசவிழா,

சென்ற ஆடித்திங்கள் 13-ம் நாள் (28-7-27) குருவாரம் புஷ்யதினத்தன்று சத்தியஞானசபையில் அருட்பெருஞ்ஜோதி தரிசனமும், சத்திய தருமச்சாலையில் ஸ்ரீமத் வள்ளலார்க் கலங்காரதூப தீப ஆராதனை வழிபாடுகளும், திருவருட்பா பாராயணங்களும், நூற்றுக்கணக்கான அடியார்களுக்கு அன்னதானங்களும், செவ்வனே நடைபெற்றது. இவைபலத்தை தனதருமைப்பொருளுதவியால் நடத்திவைத்தவர் சருவாளர் குரிஞ்சிப்பாடிகுப்பம் R, ஜீவரத்தினசாமி நாடாரவர்கள். இவ்வண்ணம் என்றென்றும் நடைபெறுமாறு எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக. சுபம். சுபம்.

நிற்க, நாளது ஆண்டு புரட்டாசித்திங்கள் 10-ம் நாள் (26-9-27) சோமவாரம் சித்திரை நட்சத்திர தினத்தில நம்மையாட்கொண்டருளிய ஸ்ரீமத் வள்ளற்பெருமான் பிறந்ததினக்கொண்டாட்ட விழா சத்திய தருமச்சாலையின்கண்ணே எங்களால் நடைபெறப்போகிற படியால் எமதன்பார்ந்த நண்பர்களெல்லாம் அச்சுபதினத்திற்கு வந்திருந்து அவ்விழாவை சிறப்பித்தும், தங்கள் தங்களாலியன்ற பொருளுதவியைச்செய்தும். மேலான திருவருளுக்குப் பாத்திரராவார்களாகவெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இராமலிங்க சங்கத்தார்.

மாயூரம் சன்மார்க்க சங்கம்
ஸ்ரீமத், சுவாமிகளின் இரண்டாவது பூசாவிழா.

எல்லாம்வல்ல பரம்பொருளின் திருவருளால் பிரபவஆண்டு ஆடித்திங்கள் 20-ம் நாள் வியாழக்கிழமை சித்திரை நட்சத்திரத்தன்று இச்சங்கத்தில் இரண்டாவது ஆண்டு பூசாவிழா இனிது நிறைவேறியது.

கதம்பம்.

அற்றைநாட் காலையில் பலசாதுக்கள் ஒன்றுகூடித் திருவருட்பாவை வாசித்து, இன்பநுகர்ந்து, ஸ்ரீவள்ளலாரின் பெருமையில் ஈடுபட்டிருந்தனர். நடுப்பகலில் ஸ்ரீமத் சுவாமிகட்கு தூபதீப நைவேத்திய ஆராதனை முதலியன சிறப்பாகநடைபெற்றன. அப்பொழுது பலஅன்பர்கள்வந்திருந்து தரிசித்துப் பேரானந்தப் பெருவாரிதியில் மூழ்கினர். பிறகு ஆங்கு ஏராளமாய்க் கூடியிருந்தஅடியவர்களுக்கும்,ஏழைகட்கும் அன்னம்அளிக்கப்பட்டது

மாலை 4-மணிக்குச் சங்கத்தலைவர் திரு. அண்ணாமலைப் பிள்ளையவர்களின் வேண்டுகோட் கிணங்கி, ஸ்ரீமத்இராமலிங்க சுவாமிகளின்(திருவுருவப் படத்தின்) தலைமையின்கீழ் "அருட்பிரகாசம்" பத்திராதிபராகிய தில்லையாளி திரு.கோ. வரதராஜரவர்கள் "வள்ளற்பெருமான் சரித்திரத்தைப்பற்றி ஓர் அரிய விரிவுரை யாற்றினர். உபந்நியாசகர், சுவாமிகளின் திருவவதாரமகிமையையும், மகாவித்துவான் சபாபதிமுதலியாரிடம் கல்விகற்றதன் தமையனுருக்குப் பதிலாகக் கதைபிரசங்கம்செய்த சீர்மையையும் சகோதரர் வற்புறுத்தற்கிணங்கித் திருமணஞ் செய்துகொண்டு உலக வியவகாரங்களில் ஈடுபடாதிருந்த மேன்மையையும், ஞானசபைப்பிரதிஷ்டை செய்த பான்மையையும், மேட்டுக்குப்பத்தில் திருவுருக்கரந்த பெருமையையும், மற்ற அற்புதச் செயல்களின் திறமையையும், அருட்பாவின் அருமையையும் சபையோர்க்கு விளக்கமாக யெடுத்துரைத்தனர்.

இரண்டாவதாக, கும்பகோணம் சன்மார்க்க சங்கத்தின் உபதலைவர் திரு. உ. தியாகராஜபிள்ளை அவர்கள் "வள்ளலாரும், ஜீவகாருண்யமும்" என்பதைப்பற்றி ஒரு இனிய சொற்பொழிவு நிகழ்த்தினர். அன்னார் ஜீவகாருணியமே சீரியபேரறம் என்றும், ஜீவகாருணியமே முத்தி வீட்டிற்குத் திறவுகோல் என்றும், ஜீவகாருணியமே சங்கங்களின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும் என்றும், ஜீவகாருணியமே சன்மார்க்கநெறிகிற்குமொரு வனுக்கு முக்கிய அம்சம் என்றும், சங்கங்கள் முன்னேறவேண்டியதற்குரிய வழிகளையும் எடுத்துச் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தனர். அவ்வமையம் பல அன்பர்கள் விஜயம் செய்திருந்ததுடன். வடலூர் அறச்சாலையின் அதிபதியாம் உயர்திரு. சுப்பராய சுவாமிகளும், அமிழ்தினும் இனிய அருட்பா பாடவல்ல காஞ்சீபுரம் திரு. வேதாசல முதலியாரவர்களும் வந்தமை யாம் பெற்ற பேறெனக் கொள்ளவேண்டும். கடைசியாக சங்கத்தலைவர் சொற்பொழிவாளர்கட்கும், அவையோர்க்கும் நன்றிகூற சபைக்கலைந்தது.

இரவு 8-மணிக்கு ஸ்ரீமத் சுவாமிகளின் திருவுருவப்படத்தை கண்கவர் வனப்பினையுடையதாகவும் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் தன்மைத்தாகவும், அலங்கரித்து புட்பவிமானத்திடை எழுந்தருளச்செய்தனர். கன்னெஞ்சம் கரைந்துருகும் வண்ணம் திருவருட்பா பாடிப்புகழ்பெற்ற திரு. சீனிவாசப்பிள்ளை அவர்கள் தமது கூட்டத்தாருடன் இனிய பாக்களைப் பாடி ஆங்கு குழுமிய பல்லோரையும் மகிழ்வித்தனர். திருவுருவப்படம் திருவீதிவலம்வந்து இரவுசுமார் மூன்றுமணிக்கு சங்கத்தைசார்ந்தது.

மறுநாள் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருநட்சத்திர தினமாதலின் குருபூசையும். தேவாரபாராயணமும் நடைபெற்றன.

மாயூரம். G. கல்யாணம். B. A.

திருநாகேச்சுரம்:—சன்மார்க்கசங்கத்து ஆருவது ஆண்டு நிறைவு விழா.

நாளது பிரபவ ஆண்டு ஆடித்திங்கள் 22-ம் நாள் திருநாகேச்சுரம் அண்ணாமலையார் மடம் சன்மார்க்க சங்கத்தின் ஆறுமாண்டு நிறைவு விழா இனிது நடந்தேறியது. காலை 6-மணிமுதல், ஆறுதலைப்பெருமானுர்க்கபிஷேக தூபதீபஆராதனைகளும் நைவேத்தியங்களும், தேவார திருவாசக திருவருட்பா வாதிய புண்ணியவேத பாராயணங்களும், இன்னிசைக்கருவிகளோடு கூடிய பஜனைகளும் மேளதாள முழக்கங்களும், திருநீற்றுப்பிரசாத வினியோகங்களும் மிகவும் விமரிசையாக நடந்தேறின. பகல் 12-மணிமுதல் அடியார்களுக்கும் எழ்மைமக்களுக்கும் மற்றேனைய சகோதரர்களுக்கும் அன்போடும், அமைதியோடும் உபசாரத்தோடும் அறுசுவையோடு கூடிய உண்டி அளிக்கப்பட்டது. மாலை 3-மணிமுதல் வலங்கிமான் இராமையாபாகவதர் அவர்களால் ஸ்ரீமத் இராமலிங்கசுவாமிகளின் சரித்திர காலட்சேபஞ் செய்யப்பட்டது. இரவு 6-மணிமுதல் பெருமானின் திருவுலாக்காட்சி நடைபெற்றது. மறுதினம் வாழைக்கமுகு, அசோகு முதலியவற்றுல் அலங்கரிக்கப் பெற்ற பிரசங்க மண்டபத்தில் அனேக பிரமுகர்களும், பக்திமான்களும், வித்வஜனங்களும் நிரம்பிய குழுவில் மாலை 3 மணிக்குமேல் சொற்பொழிவுகள் நிகழ்ப்பெற்றன. அவ்வமயம் சங்கத்தலைவரின் வேண்டுகோட்கிணங்கி காஞ்சிபுரம் சரவணனந்த சுவாமிகள் தலைமை வகித்தனர். அவர் அனுமதியின்படி வடலூர் அருட்பிரகாசம் பத்திராதிபர் தில்லை கோ. வரதராசன் அவர்கள் பக்தியைப்பற்றியும் வடக்குப்பட்டம் திருவாளர், சாந்தானந்த திருக்கூட்டத்தினரால் மணிவாசகப் பெருமானின் அன்பின்பெருக்கைப்பற்றியும் உபந்நியாசங்கள் நடந்தன. சங்கத்தலைவர், ஸ்ரீலஸ்ரீ, ஷண்முகானந்த சுவாமிகள் தன்னைத் தரிசித்த அன்பர்கட்குத் தன்னையறிந்தின்பமுறுந் தன்மையைத் தன்னடையாலும், உரையாலும் அடங்கின மனத்தினமைதியினாலும் காட்ட மெய்யன்பர்களுக்கு இன்பத்தை விளைவித்தது. சிதம்பரம் பாலகவி, யோகானந்தம் பாலநாராயண சுவாமிகளால் இயற்றிய மகேஸ்வர பூஜா வரவேற்புத் திருமுகம், சன்மார்க்கசங்கப்பொழிவு என்னும் இரண்டுசொற்பொழிவுகளை ஒன்ருக அச்சிட்டு எராளமாகவந்த கனவான்களுக்கெல்லாம் உதவப்பட்டன. சங்கக்காரியதரிசி ஸ்ரீமான், செ. ரெ. மு. பஞ்சநதமுதலியார் அவர்கள் மேற்கண்ட வைபவங்களுக்கெல்லாம் மனமொழி மெய்களால் தொண்டாற்றிய தனைவாக்கும் ஆனந்தத்தை உண்டுபண்ணின.

இங்ஙனம், சன்மார்க்க சங்கத்தார்.

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை,

ஓர் சிறந்த நன்கொடை.

உத்தரஞானசிதம்பரம் சத்திய தருமச்சாலையிலேற்பட்டிருக்கும் சமரவேத பாடசாலைக்காக மதுரை மேலவாசி வீதி S. வேலுத்தேவா. அவர்கள் ரூபா 1–0–0 நன்கொடையாக அனுப்பியிருக்கின்றனர். கையொப்ப மிட்ட அபிமானிகளும் மற்றேனைய கனவான்களும் தயவு செய்து தங்கள் தங்கள் பணங்களையும் அனுப்பிவைப்பார்களாக.

ப–ர்.

சந்தாதாரர்களுக்கு ஓர் அறிக்கை

மாதந்தோறும் நாம் அனுப்பிவரும் பத்திரிகை சிலருக்கு நேராகவும் சிலருக்கு கைமாறியும் சிலருக்கு நட்பினர் மூலமாகவும் கிடைக்கும். பத்திரிகை கிடைத்தவுடன் சந்தாதாரர்கள் தமது நேரான விலாசத்தை எழுதியனுப்பவேண்டியது. அத்துடன் தமது நண்பர்களையுந்தூண்டி இப்பத்திரிகைக்கு சந்தாதார்களாகச் செய்விப்பதும் ஓர்பேருபகாரமாகும். பத்திரிகை வேண்டாத அன்பர்கள் நமக்கு வீண்கவலைக்கும் வீண்செலவிற்கும் இடமில்லாமல் தங்கள் அபிப்பிராயத்தை தெரிவித்துவிட்டால் அதுவே ஓர் சிறந்த கைம்மாறாகும். பத்திரிகை மாதந்தோறுங் கிடைக்காதிருந்தால் உடனே பத்திராதிபருக்கு அறிவிக்கவேண்டியது. சந்தாவை முன்பணமாக அனுப்பி பத்திரிகையின் அபிவிருத்தியைக் கோரும்படி நண்பர்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

வடலூர்,

தி. கோ. வரதராஜர்.

பத்திராதிபர்.

சிறையாறு உபாத்தியாயர் ஸ்ரீமான், ட. அ. கிருஷ்ணசாமிப்பிள்ளையவர்கள் பொன்னுக்கண்ணிப் புதுமையென்னும் வியாசம் சஞ்சிகையின் இடம்போதாமைப்பற்றி நிறுத்திக்கொள்ளப்பட்டது.

ப–ர்.

விளம்பரம்.

இவ்விளம்பரத்தைப் படிக்கும் ஒவ்வொருவர்
ளும் இதைத் தங்களாலியன்றவரையில் பரவச்செய்யு
படி கேட்டுக்கொள்ளுகிறோம்,

நமது அச்சியந்திரசாலையில் சகலவிதமான புதிய
எழுத்துக்களும், நல்லவேலைகளும், குறைந்த சார்ஜு
டன் சகலவிதமான சௌகரியங்களோடு குறிப்பிட்ட
காலத்தில் தவக்கமின்றி தயாரித்துக்கொடுக்கப்படும்,

ஆர்டர் அனுப்பப்பட்டவர்கள் அட்வான்ஸ்த
கையோடு தங்களுடைய முழுபெயர் விலாசத்தையும் தெ
ளிவாய்எழுதித தெரிவிக்கவேண்டியது,

இரத்தின விலாசம் பிரஸ்,
பிறையார்.